உ

சிவமயம்

ஓம் தத் ஸத் பிரஹ்மணே நம:



திருவாரூர் வன்மீகபுரமெனும் மடப்புரம்

ஸ்ரீ குரு

# தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்.

இது

ஸ்ரீ கோவிலூர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் மாணக்கரும்
திருவாரூர் ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள்
மடாதிபதியுமாயிருந்த

**ஸ்ரீ சிவாநந்த சுவாமிகளால்**

இயற்றி வெளிப்படுத்தப்பெற்றது

இது

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடாதிபதி

**ஸ்ரீ வீர. சு. ஷண்முகாநந்த சுவாமிகளால்**

ஒன்பதாம் பதிப்பாகச்

சென்னை, சூளை,

ஸ்ரீ பாரதி பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1946

காபி [...] விலை அணா 10

TIRU...OOYANA MA...
...307
A·NO: 1105
Q: 332 v

ஸ்ரீ ஜெகத்குரு பீடம் நியாயசந்திர வேதாந்த பாஸ்
ஸ்ரீமத் மகா மண்டலேஸ்வர ஸ்ரீ வீரசேகர

## சுப்பைய ஞான தேசிகேந்திர சுவாமிக

அவர்கள் அருளிச்செய்த நூல்கள்:— ரூ.

1. *ஸ்ரீகணேசகீதை (கிரந்தாக்ஷரத்தில்மூலசுலோகம், தமிழ்ச்செய்யுள், சுலோகார்த்தம், விசேஷ உரை 6-வது அத்தியாயம் வரை). .... 1
2. ஸ்ரீமத் பகவத்கீதை ஸ்ரீ மதுசூதன சரஸ்வதி சுவாமிகள் அருளிச்செய்த கூடார்த்த தீபிகையென்னும் உரையின் மொழிபெயர்ப்பு. .... 5
3. *பெரிய ஞானவாசிட்டம் (வசனம்) முதல்பாகம் (சமஸ்கிருத பிருஹத்யோக வாசிட்டத்தின் மொழி பெயர்ப்பு கற்கடி கதை வரை). .... 2
4. ஞானவாசிட்டம் (ஸ்ரீ காஷ்மீர பண்டிதர் திரட்டியருளிய 6000 சுலோகத்திற் கிணங்க ஸ்ரீ ஆளவந்தார் முனிவர் மொழிபெயர்த் தருளிய தமிழ்ச் செய்யுளும், கோவிலூர் நித்யானந்த முனிவர் மொழிபெயர்த் தருளிய சமுகாரதரணி யென்னும் உரையும், ஷை சுவாமிகள் திரட்டி யருளிய ஸ்ரீ வீரசேகரமென்னும் விசேஷ உரையும்) பாகம் 2-க்கு .... 10
5. *ஸ்ரீவீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம் முதல் மூன்றுபாகம் .... 1
6. ஸ்ரீசிவமஹிம்நஸ்தோத்திரம் ஸ்ரீபுஷ்பதந்த முனிவர் அருளிச்செய்த சுலோகத்திற்கிணங்க ஷை சுவாமிகள் அருளிச்செய்த தமிழ்ச்செய்யுளும், ஸ்ரீ மதுசூதன சரஸ்வதி சுவாமிகள் அருளிச்செய்த வியாக்கியானத்திற் கிணங்க ஸ்ரீ திருவண்ணாமலை ஈசானியமடாலயம் ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகள் அருளிச்செய்த சுபோதினியென்னும் உரையும்.... 0 5
7. உபதேச சகஸ்ரீ வசனம் ஸ்ரீ சங்கர பகவத் பூஜ்ய பாதாசாரிய சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியதின் மொழி பெயர்ப்பு. .... 0 10
8. தோடகமென்னும் வேதசார சமுத்தரணம் ஸ்ரீ தோடகாசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய சுலோகத்திற்கு தமிழ்ச் செய்யுள் பதவுரை, விசேஷவுரை. .... 0 10
9. கண்டனகண்ட காத்தியம் வசனம் கவிதார்க்கிக சக்கரவர்த்தி ஸ்ரீலஸ்ரீ ஹர்ஷ முனிவர் அருளிய சமஸ்கிருத நூலின் மொழிபெயர்ப்பு. .... 2 0

---

* இனி திருமுறைப் பகுதிகள் வெளிவரும்.




ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள்

திருவாரூர்.

உ

52-2

சிவமயம்.

ஓம் தத்ஸத் பிரஹ்மணே நமஃ

திருவாரூர் வன்மீக புர மெனும் மடப்புரம்

ஸ்ரீ குரு

# தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்.

இது

ஸ்ரீ கோவிலூர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் மாணாக்கரும்

திருவாரூர் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள்

மடாதிபதியுமா யிருந்த

**ஸ்ரீ சிவாநந்த சுவாமிகளால்**

இயற்றி வெளிப்படுத்தப் பெற்றது.

இது

ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடாதிபதி

**ஸ்ரீவீர். சு. ஷண்முகாநந்த சுவாமிகளால்**

ஒன்பதாம் பதிப்பாகச்

சென்னை - சூளை,

ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1946

காபிரைட் ரிஜிஸ்டர்ட்]

[விலை அணா 8

உ

சிவமயம்.

ஓம் தத்ஸத் பிரஹ்மணே நம:

# முகவுரை.

பொன்னிமாநதி மன்னி நீழலிற் பன்னலந் தருஞ் சென்னி நாட்டினில் நீர்வள முதலிய பல வளங்களும் நிறைந்த செல்வத் திருவாரூரின்கண்ணே 109 - வருடத்திற்கு முன்னர் அளவின்றிய அற்புதங்கள் தோன்ற வெழுந்தருளி யிருந்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளது சரித்திரங்களைச் சிற்சிலர்கள் சொற்பஞ் சொற்பமாக வெழுதி வைத்திருப்பதைத் தருவித்து முறையே கோர்வைசெய்து அச்சிட்டு வெளிப்படுத்தினால் யாவரும் படிக்கும்படி நேரிடும்; அங்ஙனம் நேரிடிற் சுவாமிகளி னற்புத மகிமைகள் விளங்கும்; விளங்குமாயின் யாவர்களுஞ் சுவாமிகளிடத்திற் பக்தி செய்து நற்கதி யடைவார்க ளென் றெண்ணுகின்றன மெனப்பலர் இவன்பால் வந்து கேட்டுக்கொண்டனர். அவர்கள் கருத்துப் போல வெனது கருத்து மிருந்தமையாற் சுவாமிகளின் சரித்திரங்களை எழுதி வைத்திருக்கும் இடங்களை விசாரித்து, நீடாமங்கலம், நல்லய்ய நாய்க்கர் குமாரர் நாராயணசாமி நாய்க்கர் அவர்களிடத்திலும். சிக்கல் பொருள் வைத்தசேரி கரும்பாயிர முதலியார் அவர்களிடத்திலும், நாகப் பட்டணம் வாணக்காரத் தெரு சுப்பபிள்ளையவர்கள் வீட்டிலும், வசந ரூபமாக விருந்தவற்றையும், தஞ்சைச் சரபோஜி ராஜன் கேட்டுக்கொண்டபடி வித்துவானாகிய உரத்தநாட்டுச் சத்திரம், நாராயணசாமி நாய்க்கரவர்களால் (520) செய்யுள்களாகப் பாடப் பெற்றிருந்ததையுந் தருவித்து மேற்படி தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளின் சகோதரராய் நீலப்பாடி மடத்தி னதிபதியாக விருந்த நமச்சிவாய சுவாமிகளின்பால் மேற்படி தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளின் பூர்வ விருத்தாந்தங்களை நன்றாய்க் கேட்டுணர்ந்த அவர் சிஷ்யராகிய பொன்னம்பல சுவாமிகளின் வாக்கினாலும் திருவாரூர் பூர்வ மிருந்த பல முதியோர்கள் வாக்கினாலு மியான் கேள்விப்பட்டிருந்ததற் கேற்கப் பார்க்கும்

போது வசந ரூபமாக விருந்த பிரதிகளும், பாடல்களுமாக விருந்தது மாகிய ஏடுகளிற் சிற்சில செல்லுண்டு ஜீரணமாகி விட்டமையினாலோ, மற்றவைகளினாலோ ஒன்றற் கொன்று சிற்சில வற்புதங்கள் தொடற் பின்றியுங் குறைவாகவு மிருந்தன; பாடல் ரூபமான பிரதி, பூமிதேவியின் தவத்துக் கிரங்கிக் கைலாசபதியே குருமூர்த்தமாக ஆவிர்ப்பவித் தெனவும், தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் அயோநிஜ ரெனவும் கூறுகின்றது. மற்றைய வசநரூப்மாக விருந்த பிரதிக ளனைத்தும் மாதாவின் வயிற்றினின்றும் உற்பவித்த தாக யாம் கேள்வியுற்றபடியே கூறுகின்றன! இங்ஙனம் கூறுகின்ற இவ் விரண்டில் சுவாமிகளின் சகோதரராகிய நமச்சிவாய சுவாமிகள் நீலப் பாடியிலிருந்ததாக விளங்குகின்றமையால் பாடல் ரூபப் பிரதியில் கைலாயத்தி லிருந்து சிவபெருமானே தக்ஷிணாமூர்த்தி என்னுங் குரு மூர்த்தமாக வந்தெனக் கழறியுள்ளதை மாத்திரம் விடுத்து மற்றவைகளையும் வசந ரூபப் பிரதிகளி லுள்ளவைகளையும் பார்த்து இரு வகைப் பிரதிகளிலும் ஏடுகள் செல் லுண்டு அக்ஷரங்கள் அரூபமாய் விட்டமை பற்றி பல வற்புத சரிதங்கள் நன்குய் விளங்காமையால் அவைகளை விடுத்து, முன் னடந்தது பின்னரும், பின் னடந்தது முன்னருமாக மயங்கி யிருந்தவைகளைக் கேள்வியினால் யான் தெரிந்த வரையில் திருத்தியும், விளக்கியும் ஒழுங்கு படுத்தி பாடல் ரூபமாக விருக்கில் தக்க கல்விமான்களுக்குப் பயன்படுமே யன்றிச் சாமாந்ய கல்விமான்களுக்கும், ஸ்திரீகளுக்கும், பயன்படுவது மிகவுமருமையாக விருக்கும்; வசந ரூபமாகவே யிருக்கில் யாவர்களுக்கும் எளிதாகப் பயன்படு மெனக் கருதி அச்சிடுவிக்கலானேன்.

இச் சரித்திரத்தில் சொற் குற்றம், பொருட் குற்றம் முதலியவைகளிருக்கினும் பெரியோர்கள் மன்னித்துக் கொள்ள வேண்டு மென வந்தநம் செய்துகொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

**சிவாநந்த சுவாமிகள்.**

இப் புத்தகம் திருவாரூர் வன்மீக புரமெனும் மடப்புரம் ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடம் மடாதிபதியா யிருந்து பரிபூரண மடைந்த ஸ்ரீமது மதுரை சிவாநந்த சுவாமிகளால்

சென்ற பிலவங்க ௵ வைகாசிமீ 30௳ லோகோபகாரமாக வெளிப்படுத்தப் பெற்றிருந்தது. அதனுல் வரும் ஊதியத்தை **ஸ்ரீ குரு தக்ஷிணுமூர்த்தி சுவாமிகள் அகண்ட தீபப் பணிக்கு** உபயோகிக்க புத்தகம் ஒன்றுக்கு 8-அணு வீதம் கிரய மேற்படுத்தி விற்று முதல்செய்து வரவேண்டுமென்று அன்பர்கள் விண்ணப்பித்துக் கொண்ட வண்ணம் அச்சியற்றிப் படத்துடன் ஒன்பதாம் பதிப்பாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. அன்பர்களனைவரும் பக்தி சிரத்தையுடன் வாங்கி வாசித்து ஆநந்தாநுபவமடைவதுடன் ஷை அகண்ட தீபப் பணிக்கும் தங்களாலியன்ற பொருளுதவி புரிந்து ஸ்ரீ குரு தக்ஷிணுமூர்த்தி சுவாமிகளின் திருவருட் கிருபையைப் பெற்று வாழ்ந்து வர எல்லாம் வல்ல இறைவனது இணையடியை ஏற்றிப் போற்றுகிறோம்.

இங்ஙனம்,
ஸ்ரீ குரு தக்ஷிணுமூர்த்தி சுவாமிகள் மடம்,
மடாதிபதியாகிய
**வீர. சு. ஷண்முகாநந்த சுவாமிகள்**

சுபம்.

உ

சிவமயம்.

அருணாசல மென்னும்
பிள்ளைத் திருநாம முடைய
ஸ்ரீ குரு

# தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்

பொன்னி நன்னதி புடையே பிரவாகித்து வருங்காரணத் தானே நீர்வள நிலவள முதலிய எவ்வளங்களும் நிறைந்தோங்கப் பெற்றதும், எந்நாட்டினு மிக்க நன்னாடாகிய சோணாட்டிற்குச் சிரமாக விளங்குவது மாகிய திரிசிர புரத்திற்குச் சமீபமா யுள்ளதும், கீழாலத்தூ ரென்னும் பெயர் பெற்றது மாகிய சிற்றூரின்கண் சற்றேறக் குறைய இருநூறு வருடங்கட்கு முன் கார் கார்த்த வேளாளர் மரபில் அவதரித்தவரும் கல்வி யறி வொழுக்கங்களினும் குரு லிங்க சங்கம பக்தியினும் சிறந்த சிவ சிதம்பரம் பிள்ளை யென்பாரொருவ ரிருந்தனர். அவரும் அருந்ததி யன்ன கற்பிற் குரிய அன்னார் மனைவியராகிய மீனம்பிகை யென்பாரும், ஒற்றித்த அறிவும் அன்பு முடையராய்த் தமக் குரிய இல்லற முறை வழாது நடத்தி வந்தனர்.

அன்னாரிருவருந் தமது மரபுக் கேற்ற சைவாநுட்டான சிவ பூஜை முதலியவற்றை மிக்க அன்புடன் வழாது செய்து வருங் காலையில் "பெறு மவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த மக்கட் பேறல்ல பிற" என்பன முதலிய ஆன்றோர் கூற்றை யுன்னினர்களாய் இம்மை மறுமைப் பயன்களை யளிக்கத் தக்க நன் மகப்பேறின்மை பற்றி மன வருத்தமுற்றுப் பின் ஒரு புடை தெளிந்தனராய் தவத்தா லெப் பயனும் பெறல் எளிதாயிருக்க இப் பயனொன்றோ வாராதொழியும்!! வருமென்னுந் துணிபுடன் புத்திரப் பேற்றிற் குரிய பல நோன்புகள், புண்ணிய க்ஷேத்திர யாத்திரை, தீர்த்த ஸ்நாநம், ஸ்தல வாசம், சிவ விஷ்ணுவாதி மூர்த்திக டரிசநம், பெரியோர் சேவை யாதிகள் செய்து கொண்டு பூவலம் வருங் காலையில் நானிலம் புகழும் நடு நாட்டின்கண் நம்மனோ

ருய்யுமாறு அருட் கடலாகிய நம் பெருமான் சோதி மலையாக நின்றருளிய திருவண்ணாமலை யென்னுந் திருப்பதியை யடைந்து அத்தலத்திற் சின்னாள் வாசஞ்செய்து அங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கி கிரிப் பிரதக்ஷணஞ் செய்து மகப்பேற்றை விரும்பிய மனத்தோடண்ணாமலையாரையும், உண்ணாமுலை யம்மையையும் விதி முறை வழாது தரிசித்து வரும் காலத்தில் ஓர்நாள் அண்ணாமலையார் இவர்களன்புக் கிரங்கி அன்றிரவு இவ்விருவர் கனவிலும் விபூதி யுருத்திராக்க காவிகாம்பர தாரியாகிய துறவராகத் தோன்றி "உங்கள் மகப்பேறின்றிய குறைவை நாமே வந்து நீக்குவோம், நீவிர் நும்மூரைச் சேருங்க" ளெனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினர். உடனே இருவருந் திடுக்கிட் டெழுந்து ஒருவர்க்கொருவர் தாம் தாம் கண்ட கனவைக் கலந்து பேசிக்கொண்டு பெருமானது திருவருளை வியந்து ஆநந்த பரவசராய் மறு நாட் காலையில் அப்பெருமானையும், அம்மையையுந் துதித்து விடை பெற்று அத் திருப்பதியை விட்டு நீங்கி தங்களிருப்பிடஞ் சேர்ந்து அண்ணாமலையாரை அன்புடன் தியானஞ் செய்துகொண் டிருந்தனர்.

இவ்வாறு சின்னாட் செல்ல மீனாம்பிகை என்பவர் வயிறு வாய்த்து திங்கள் பத்துஞ் சென்ற பின்னர் உத்தமமாகிய சுப திநத்தில் உலகிலுள்ள சர்வான்மாக்களும் உய்யவும், சைவ முதலிய சமயங்களோங்கி சமயாதீதப் பேற்றைப் பெறவும் வலம்புரி யீன்ற நன் முத்தென ஓர் புத்திரனைப் பெற்றனர்.

இவ்வாறு தமக் குண்டாகிய புத்திரப்பேற்றைக் கேள்வியுற்ற தந்தையாகிய சிவ சிதம்பரம் பிள்ளை மிக மகிழ்ச்சியோடு சாத கன்மங்களை முறையே செய்து அருணாசலேசுர ரருளாற் றோன்றிய மகவாதல் பற்றி அருணாசல மெனத் திருநாமஞ் சாத்தினர். அப் புதல்வனைப் புதைப் பொருள் கண்ட மிடியர்கள் போல மாதா பிதாக்க ளிருவர்களும் நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்த்து அடிக்கடி பார்த்து எடுத் துச்சிமோந்து முத்தமிட்டு ஆநந்தித்து வந்தனர். இங்ஙனம் வரு நாளில் சிவ சிதம்பரம் பிள்ளை மனைவியாராகிய மீனாம்பிகையார் இரண்டாவது வருடத்திற் கெர்ப்பவதியாய் மற்றொரு புத்திரனைப் பெறவும் அப் புத்திரனுக்குச் சாத கருமம் முதலியவற்றை விதி முறை வழாது

செய்து நமச்சிவாய மென நாமமுஞ் சாத்தினர். இவ் விரு மைந்தர்களையும் மிக்க வன்போடு பாது காத்து வளர்த்து வந்தனர்.

இவர்களால் வளர்க்கப் பெற்ற இருவர்களில் சிரேஷ்ட புத்திரனாகிய அருணாசலமென்னுங் குழந்தை பிறந்தது முதற் பசியாதிகளைப் பற்றியுரோதநஞ் செய்வது, மொன்றை நோக்கிப் பயந் தொலியிட் டழுவது, மொன்றை நோக்கிச் சிரித்தலுஞ் செய்த லிலனாய், பாயல் தொட்டின் முதலியவைகளிற் கண்களைச் சில போது முகிழ்த்துஞ், சில போது மலர்த்தும், ஒன்றையும் விசேடமாகச் சுட்டிப் பாராமலும் மௌநமாகவே சயனித் திருக்கும். மாதா மடியில் இருத்தி முலைக் காம்பை வாயில் வைத்தாற் சுவைத்துப் பாலை யருந்தும் வைக்கா விடின் மௌநமாகவே யிருக்கும். இங்ஙனஞ் சிலநாட் சென்று குப்புற்றிருந்து தவழ்ந்து நின்று நடக்கும் பருவ காலங்களிலும் சில போது பதுமாதந மிட்டுக் கண்முகிழ்த்து நிட்டை புரியும். சில போது ஆதநமுங் கண்களை முகிழ்த்தலு மின்றி யுபசாந்தமாகிய மநத்தோடு மௌந மாகவே யிருக்கும். இங்ஙனம் ஐந்து வய தளவும் வாய்திறந்து பேசாதிருப்பதை நோக்கி அருணாசலேசுரர் அநுக்கிரகத்தாற் பிறந்த பிள்ளையாக விருந்தும் ஊமையாக விருக்கின்றதே! இஃது நமது தவக் குறைதானோ வென மாதா பிதாக்க ளிருவர்களும் வியாகூல சித்தர்களா யிருக்கும்போது ஸ்ரீ அருணாசலேசுரர், கிருபை கூர்ந்து இவர்கள் மநக்குறையை நிவர்த்திக்கும் பொருட்டு காவிகாம்பர உருத்திராக்க விபூதி தாரணங்களையுஞ் சடா முடியையு முடைய துறவராய்த் தோன்றி வீட்டின் முகப்பி லிருக்கும் சிவ சிதம்பரம் பிள்ளைக்கு முன் னின்றனர்.

அப் பிள்ளையார் அத் துறவரைப் பார்த்துத் திடுக்கிட் டெழுந்து முன் சென்று நமஸ்கரித் தெழுந்து கை கட்டி வாய் புதைத்து நின்று சுவாமின்! அடியேனுக்குச் சிவ பெருமான் கிருபையாற் றோன்றிய மைந்த னொருவனைந்து வயதாகியும் வாய் திறந்து பேசாம லூமனாகவே யிருக்கின்றா னக்குழந்தையைப் பேசும்படி அநுக்கிரகஞ் செய்யவேண்டு மெனக்கூறிப் பின்னருந் திருவடியில் வீழ்ந்து பிரார்த்தித்தனர். அப்போது துறவராக வந்தவர் அக் குழந்தையை நாம் பார்ப்போ மென்றார், உடனே

தந்தை யாகிய சிவ சிதம்பரம் பிள்ளை அப் பெரியோரை உள்ளே அழைத்துச் சென்று ஊமனாகிய தன் புதல்வனைக் காட்டும் போது அக் குழந்தை ஆதந மிட்டுக் கண்களை மூடி நிட்டையி லிருக்கத் துறவர் பார்த்துப் பின் சிவ சிதம்பரம் பிள்ளையை நோக்கிப் பெற்றோர்களாகிய உங்களையும், உங்கள் குலத்தோர்களையு முலகத்திலுள்ள பக்த சநங்களையும் நற்கதியிற் சேர்க்கும் பொருட்டு உங்கட்குப் பிள்ளையாயவதரித்திருக்கின்றா னிக்குழந்தை; ஊமனல்லன்; நீ உன் குழந்தையோடு பேசுவாய், பதிற் கூறுநிற்பன் என்று துறவர் சொல்ல, சிவ சிதம்பரம் பிள்ளை அப்பா குழந்தாய்! ஏன் கண்களை மூடிக்கொண்டிருக்கிறா யென வினவ! அதற்கு மைந்தன் சும்மா யிருக்கிறேனெனச் சொல்லினன். சொல்லவும் துறவராகிய முனிவர் சும்மா யிருக்கின்ற நீ யாரென்றார்; அதற்குக் குழந்தை முகிழ்த்த கண் டிறவாமல் நீயே நான், நானே நீ யெனக் கூறினன், இங்ஙனங் கூறவும் முன் னின்ற துறவர் சத்தியஞ் சத்திய மென வசிித்து விட்டு அந்தர்ஸ்தானமாயினர். இவ் வற்புதத்தைக் கண் ணுற்ற மாதா பிதாக்க ளிருவரும் புத்திரனைப் பேசுவிக்கும்படியாக வந்தவரும், இப் புத்திரரும் அருணாசலேசுரரே யாகும், அதனா லன்றோ அவர் கேள்விக்கு நீயே நான், நானே நீ யென விடை பகர்ந்தனன், இனிமேல் இக் குழந்தையை அக் கடவுளாகவே பாவித்தல் வேண்டு மெனப் பாவித்து அற்றை நாண் முதல் மிக்க அன்பு பாராட்டி வந்தார்கள். இப்படி வருங் காலத்தில் ஓர் நாள் சிவ சிதம்பரம் பிள்ளை தன் மனையாளிடத்தில் யான் திரிசிரபுரம் போய்த் தாயுமானவரைத் தரிசநஞ் செய்து வருகிறேன், குழந்தைகளைப் பதனமாய்ப் பார்த்து வருவாயாக என்றார், அப் போது அருணாசல மெனப் பெயர் பெற்ற பெரிய மைந்தர் பிதாவைப் பார்த்து ஐயா! உம்மைப் பார்க்க பந்துக்களாயுள்ள இருவர்கள் இன்று பத்து நாழிகைக்குள் இவ்விடம் வருவார்கள் என்று சொல்லவும் பிதா செல்லலை யொழித் திருக்கும்போது புதல்வர் கூறியவாறே பந்துக்களிருவர் வந்தனர். இவ்வாறு ஒரோர் சமயத்தில் திரிகால வர்த்தமானங்களையும் பிதா முதலியோர்க்குச் சொல்லி வருவார். இவ்வாறு சொல்லி வருந் தன்மைய ராதலால், தம் மைந்தர் மாட்டு விடை பெறாது வெளியூருக்குச் செல்லுதலில்லை என்னும் விரதமேற் கொண்டவராகலான், ஓர் நாட் குழந்தை முன் சென்று நின்று சுவாமின்!

யான் சிதம்பரஞ் சென்று ஆருத்திரா தரிசனஞ்செய்து வருகி றேன், அதற்கு விடைதரல் வேண்டுமென விண்ணப்பித்தனர். அதற்கு நாளை இருபது நாழிகைக்கு உமது மாதா வானவள் தேக வியோகத்தை அடைகின்றாள்—எனக் கூறியருளினர். அப் போது பிதாவானவர் என் மாதா சரீர சௌக்யமாக நோயின்றி இருக்கின்றாளே, என்னிமித்தத்தால் தேக வியோக மாவாளென வினவ, அதற்கு சுவாமிகள் புரை யேறி விக்கலுதய மாவதினால் என்று விடையளித்தனர். அதைக்கேட்ட பிதா, சிதம்பரஞ் செல்லுதலை யொழித்தனர். மற்று நாள் சுவாமிகள் கூறிய வாறே மாதா துஞ்சினாள்.

பின்னர் சின்னாட் சென்று நமச்சிவாய மென்னும் இளைய மைந்தர்க்குப் பள்ளிக்கு வைக்கும் பருவம் வந்ததைக் கண்ணுற்று, அதற்கு வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரித்து உபாத்தி யாயரை அழைத்து வித்தியாரம்பஞ் செய்விக்கத் தொடங்குங் கால் சுவாமிகள் பிதாவை நோக்கி, ஐயா! நம்மை ஏன் பள்ளிக்கு வைக்க வில்லை என்று வினவ, சிதம்பரம் பிள்ளை சுவாமிகளுக்கு முன் வணக்கத்தோடு நின்று சகலமுந் தெரிந்த சர்வக்ஞராகிய சுவாமிகளையும் பள்ளிக்கு வைக்க வேண்டுமோ? வேண்டுமாயின் அங்ஙனஞ் செய்கின்றேனென விண்ணப்பித்தனர். அதற்கு சுவா மிகள் நம்மையும் பள்ளிக்கு வைப்பீரென்று அருள, உடனே உபாத்தியாயருக்குத் தெரிவித்துப் பள்ளிக்கு வைத்தனர்.

அற்றை நாள்முதல் தன் தம்பியோடு பள்ளிக்குச்சென்று கல்விபயிலும் பிள்ளைகளோடிருந்து அங்குள்ள பிள்ளைகளைப்போல் தானு மிராது பிள்ளைகள் விளையாடினும், உபாத்தியாயரிருக்கி னும், இல்லாதிருக்கினும் தான் வேறொன்றையும் நோக்காமற் சுவடியைக் கையிலேந்திப் பார்த்துக் கொண்டிருக்கும்! அல்லது சுவடியைக் கட்டி முன்பாக வைத்துவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டு நிட்டையிலிருக்கும், இவ்வாறிராநின்ற சுவாமிகளை உபாத் தியாயர் பார்த்துத் தம்பி! கண்களை மூடிக்கொண்டிருக்கிறாயே! படிக்கவேண்டாமோ வென்று கேட்பார்; அதற்குச் சுவாமிகள் படித்தாயிற்றென்று சொல்லும்; உபாத்தியாயர் படித்ததைச் சொல் பார்ப்போ மென்பார்; உடனே சுவாமிகள் சுவடியைப் பாராமல் யாதொரு பிழையுமின்றிச் சொல்லிவிடும். உபாத்தி

யாயர் மிக்க சந்தோஷத்துடன் மற்றொரு சுவடியைத் துவக்கிக் கொடுப்பார். அதனையும் சற்றுப்போது பார்க்கும், மற்றைய போது நிட்டையிலிருக்கும். உபாத்தியாயர் படித்தாயிற்றா வெனக் கேட்கில் அதையும் படித்தாயிற்றென்று முன்போலச் சொல்லிவிடும். இங்ஙனமிருக்குங் காலையில் ஓர் நாள் உபாத்தி யாயர் குழந்தை வீட்டுத் திண்ணையிலிருந்து கீழேவிழுந்து கை யொடிந்தது அப்போது சுவாமிகள், பள்ளியிலிருந்த உபாத்தியாய ரைப் பார்த்து ஐயா! உங்கள் குழந்தைக்குக் கை யொடிந்து விட்டது போய்ப் பார்த்து வாருங்களென்று சொல்லிற்று. உடனே உபாத்தியாயர் எழுந்து சென்றனர். செல்லும் போது தன்னை யழைக்க மனுடன் எதிரோடி வருவதைப் பார்த்து மிக வும் விரைவாகச்சென்று குழந்தையின் கைக்கு வேண்டிய சாதகங் களைச் செய்து பின் பள்ளிக்கு வந்து சுவாமிகளுக்கு முன் கை கட்டி வணக்கத்தோடு நின்று, முக்காலத்தையுமுணர்ந்துள்ள சர்வக்ஞமூர்த்தியாகிய சுவாமிகள் ஏன் பள்ளிக்கு வரவேண்டு மென்றார், அதற்குச் சும்மா வந்து போகிறேன் நீங்கள் நிற்க வேண்டாம், இருங்களென்று அருளியது. உபாத்தியாயர் முன் தானிருக்கப்பட்ட வேதிகையிலிராமல் பூமியிற்றானே யிருந்தார். இவ்வாறு சுவாமிகள் பள்ளிக்கு வரும்போது எழுந்து நிற்பர். சுவாமிகள் இருக்க ஆக்ஞாபித்த போதிருப்பார். இந்நிகழ்ச்சி யைக் கண்ணுற்ற சுவாமிகள் கல்விச் சாலைக்கு வருவதை நீத்து விட்டது. இவ்வாறு சுவாமிகள் கல்விபயின்று வந்தது மூன்று மாத காலங்களாம். பின்னர் தம்பியாகிய நமச்சிவாய மென் பான் ஒரு வருடங் கல்விச் சாலையில் பயின்ற பின்னர் பள்ளிக்குப் போதலை நிறுத்தினன்.

பின்னர் வீட்டில் பிதா செய்யும் சிவ பூசைக்கேற்ற உபகர ணங்களைச் சேகரித்துக் கொடுத்துக்கொண்டிருக்கும் காலத்தில் ஓர் நாள் சுவாமிகள் நமச்சிவாயத்தைப் பார்த்து நீ பிள்ளையார் கோவில் நந்தவநத்திற்குச் செல்லும்போது அங்கே தேங்காயீ, மாங்காய் வீழ்ந்திருந்தால் எடாதே, எடுத்தால் சிவாபராதி யாகு வாயெனத் திருவாய் மலர்ந்தது, அதைக் கேட்டுக்கொண்டு சென்ற நமச்சிவாயம் சிறுவனாதலால் ஒரு நாள் நந்தவநத்தில் வீழ்ந்துகிடந்த தெங்கின் நெற்றை எடுத்து உரித்துடைத்துத் தின்றுவிட்டுப் பின் பத்திர புட்பங்களை எடுத்துக்கொண்டு வந்து

பூக்குடலையைப் பூசை மேடையில் வைத்துவிட்டு வீட்டுக்குட் சென்றனன், அப்பூக்குடலையைப் பார்த்த சுவாமிகள், அப்பா, நமச்சிவாய மென்றழைக்க உடனே உள்ளே சென்றவன் வெளியில் வந்து சுவாமிகளுக்கு முன் னின்றனன். நின்ற நமச்சிவாயத்தை நோக்கி இன்று பிள்ளையார் கோவில் புட்பவநத்துக்குச் சென்ற நீ என்ன செய்தாய்? செய்த அபராதத்திற்குக் கங்கா ஸ்நாநஞ் செய்து விசுவேசுரரையும் தரிசித்தாலன்றி நிவிர்த்தியா காதென்று கட்டளையிட்டருளவும் நமச்சிவாயம் பயந்து ஒடுங்கி நின்றனன். அதைச் சுவாமிகள் பார்த்து இனிமேல் நீ பூசைக்குப் பத்திரம் எடுக்கவேண்டாம்; ஐயா எடுத்துக் கொள்ளுவா ரென்று ஆக்ஞாபித்து வாளா விருந்தது. அது முதல் நமச்சிவாயம் வியாகூல சித்தனாயிருந்து சின்னாட் சென்ற பின்னர் யாரிடத்திலும் அறிவிக்காமற் காசி யாத்திரை சென்றுவிட்டான். பிதாவாகிய சிவ சிதம்பரம் பிள்ளையும் மனைவியாரும் பல விடங்களிலும் தனித் தனியாக ஆள் விடுத்துத் தேடியுங் காணாமையால் மிக்க வியாகூல சித்தர்களாய் சுவாமிகள் திரு முன்சென்று நின்று நமச்சிவாயம் பத்து நாளாய் யாண்டோ சென்று விட்டான்; பல விடங்களிற் றேடியும் அகப்படவில்லை, அவனிருக்கு மிடத்தைக் கட்டளையிட்டால் அழைத்து வருவோம்; எங்கள் மநம் பரிதவிக்கின்ற தென்று விண்ணப்பித்தார்கள். அப் போது அவ் விருமுது * குரவரையும் பார்த்து நீவிர் முற் பிறப்புகளில் பெற்ற பிள்ளைகளெல்லாம் உங்களை விட்டுப் பிரிந்திருக்கின்றார்களே, அவர்களைப் பற்றிப் பரிதவியாமல் இவனை மாத்திரம் பற்றித் துன்புறுவது என்னை? நமச்சிவாயம் இப்போது காசிக்குச் சென்றிருக்கின்றான்; நீங்கள் அழைக்கினும் வரான். கிரகாச்சிரமத்தை விரும்பவும் மாட்டான். அவ் வாறிருத்தல் உங்கட்கு நன்மையைத் தரும். நீங்கள் கவலையை யொழியுங்கள் என்று திருவாய் மலர்ந்தது. அவ்விருவரும் சுவாமிகள் கட்டளைப்படி கவலை யொழிந்திருந்தனர். முன் காசிக்குச் சென்ற நமச்சிவாயம் காசியை யடைந்து முறை வழாது கங்கையாடி விசுவேசுரரையும் விசாலாக்ஷி அந்நபூரணி யம்மையாரையும் தரிசித்து சில நாள் ஸ்தல வாசஞ்செய்து பின்ன ரப்பதியினை நீங்கித் தென்றிசை நோக்கிப் போந்து காஞ்சி, சிதம்பரம் முதலிய திருப்பதிகள் தோறும் தெரிசநஞ் செய்து

* குரவர்—தாய் தந்தை

கொண்டு ஓர் நாள் நல்வினை வயத்தால் திருச்செங்காட்டாங் குடியில் அருவுருவத் திருமேனி கொண் டெழுந்தருளிய பெருமானையும், பிராட்டியாரையும், தரிசித்துச் சில நாள் அத்தல வாசஞ் செய்துகொண்டிருந்து வரும்போது அங்கு தரிசனார்த்தமாக வந்த ஒரு பெரியாரோடு சேர்ந்து கீழ்வேளூ ரென்னும் திருப்பதிக்கு மேல் பாரிசம் ஓர் மயிலுக்குட்பட்டு இருக்கும் நீலப்பாடியென்னும் ஊரையடைந்து அவண் நெடு நாளாக வசித்து வந்தவரும் கல்வியறி வொழுக்க முதலியவற்றாற் சிறந்தவரும் அபேத சாக்ஷாத்கார ஞானியுமாகிய ஓர் பெரியவர்பால் தான் சந்நியாச ஆச்சிரமத்தை பெற்றுக்கொண்டு அவர் பால் பல ஞான சாத்திரங்களை ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

இங்ஙனம் நமச்சிவாய மென்பார் வெளிப்படுவதற்குச் சில காலங்களுக்கு முன் சுவாமிக ளவதரித் தருளிய பதிக்குச் சமீபித்த ஓர் சிற்றூரின்கண்ணுள்ள ஆராவமுதையங்காரும், அவர் மனைவியார் இலக்குமியம்மாளும், தங்களுக்கு வயது ஐம்பதாகியும் புத்திரப்பேறில்லை யென்னுங் கிலேசத்தோடு சீரங்கஞ் சென்று காவேரியாடி அரங்க நாதரைத் தரிசித்துக் கொண்டு சில நாளங்கிருந்து வசித்தனர். அவ்வாறிருக்கும் நாட்களுள் ஓர் நாட் கனவில் அரங்கநாதர் ஒரு பாகவதர்போல் வந்து இருவர்களையும் பார்த்து உங்களூருக்குப் பக்கத்திலிருக்கும் கீழாலத்தூரில் ஓர் ஞான சித்தன் அவதரித் திருக்கின்றான்; அவனுக்கு மன நிறைந்த அன்போடும் ஓர் பசுவைக் குளிப்பாட்டி நீவிரிருவரும் ஸ்நான சந்தி முடித்து உலர்ந்த வஸ்திர மணிந்து சுத்தமான இடத்துள்ள புல் முதலியவற்றை மேய்த்து அப்பசுவின் பாலைப் புதிய பாத்திரத்திற் கறந்து காய்ச்சித் தினந் தோறும் கொண்டு போய்க் கொடுத்து வருவீர்களாயின் அந்தப் பாலை அம் முனிவன் புசித்து ஒரு நாள் சிறிது பாலைச் சேடமாக வைப்பான்; அதை நீவிரிருவரும் புசிப்பீர்களானால் அதுவே காரணமாகப் புத்திரோற்பத்தி உண்டாகுமெனக் கூறி மறைந்தருளினார். இவ் வாச்சரியக் கனவைக் கண்ட அவ்விருவரும் திடுக்கிட் டெழுந்து தாங்கள் ஒருவரோ டொருவர் கலந்து பேசிக்கொண்டு கருணைக் கடலாகிய ஸ்ரீ அரங்கநாதனைத் தரிசித்து விடைபெற்று தம்மூர்க்கு வந்தனர் பின்னர் பக்கத்துள்ள கீழாலத்தூரில் அவதரித் திருக்கும் மகா புருடன் யாரென விசாரித்துத் தெரிந்துகொண்டு கனவில் பாகவத

ரிட்ட கட்டளைப்படி ஆசாரத்துடன் பாலைக் கறந்து காய்ச்சித் தினந்தோறும் அவ்விருவரும் ஒற்றித்து வந்து சுவாமிகள் உட்கொள்ளும்படி கொடுத்துக் கொண்டு வருநாளில் 6—ம் நாள் கொடுத்த பாலிற் சிறிதுண்டு சிறிதுண்ணாது சேடமாக வைத்து விட்டு இனிப் பால் கொண்டுவர வேண்டாமெனத் திருவாய் மலர்ந்தருளியது. உடனே உச்சிட்டமான பாலை எடுத்துக் கொண்டுபோய் அவ்விருவர்களும் மிக்க ஆதரவோடு புசித்தனர். அதே காலத்தில் கருப்ப உற்பத்தியாய்ப் பத்தாந் திங்களில் மைந்தனைப் பெற்று மகிழ்வுற்றிருந்தனர். இவ்வரிய மகப்பேறளித்த சுவாமிகளைத் தரிசித்தற்கு விசேட நாட்களில் குழந்தையையும் தூக்கிக்கொண்டு வருவது வழக்கமாக இருந்தார்கள். இவ்வாறு தரிசித்துவரும் ஓர் நாள் மாலையில் குழந்தை தொட்டிலில் நித்திரை செய்தது. அது காரணத்தால் குழந்தையை எடுத்து வருவதற்கு இயையாமையால் வீட்டைப் பூட்டிக்கொண்டு தாமிருவர் மாத்திரம் சுவாமிகளைத் தரிசித்தற்கு வந்தார்கள். வந்து தரிசித்து நிற்கும் அவ்வாராவமுதையங்காரையும், அவர் மனைவியாரையும் பார்த்து உங்கள் வீட்டில் நெருப்புப் பற்றிக்கொண்டது; பிள்ளை தொட்டிலில் படுத்திருக்கின்றதே ஓடுங்களென்று ஆக்ஞாபித்து பின்னர் பயம்வேண்டாம் பிள்ளை வெளியில் வந்துவிடும் என்றுங் கட்டளையிட்டருளிற்று அவ்வாக்ஞையைச் சிரமேற்கொண்ட அவர்கள் ஓடிப் பார்ப்பதற்கு முன்னரே ஊர்ச்சனங்கள்கூடி எரிகிற வீட்டுக்குள் செல்ல முடியாமல் வெளிப்புறமாக ஏறி அவித்தற்கு எத்தனம் பண்ணிக்கொண்டு இருக்கும் போது வீட்டுக்குள் தொட்டிலிற் படுத்திருந்த குழந்தையை எடுத்துக்கொண்டு இலங்கோடு கௌபீநதாரியாயும் விபூதி உத்தூளிதருமாகிய ஓர் சிறிய துறவர் வெளியிலோடிவந்து கூட்ட மிட்டு வேடிக்கைபார்க்கிற ஓர் பார்ப்பனிக், கையிற் கொடுத்துவிட்டுக் கூட்டத்தில் மறைந்துவிட்டனர். பின்னர் ஓடிவந்த பிராமணனும், அவர் மனைவியும், வீடு பூட்டியபடியே எரிவதைப் பார்த்துக் குழந்தை மடிந்துபோய் விட்டதாவென்று, தலையினும் வாயினும், அடித்துக் கொண்டு அலறித் தெருவில் விழுந்தார்கள். உடனே குழந்தையை வைத்திருந்த பார்ப்பனி ஓடி வந்து உங்கள் குழந்தை இதோயிருக்கின்றது, வருந்தாதீர்கள் என்று கையிற்கொடுக்க அக் குழந்தையை வாங்கி உச்சிமோந்து மார்புறத்தழீஇப்

பின் வீடு பூட்டியபடியே யிருக்கிறதே பிள்ளையை எவ்வாறு வெளியிற் கொணர்ந்தனரோ! வென்று கேட்கக் குழந்தையை வைத்திருந்த அப் பெண் இலங்கோடு கௌபீந மாத்திரமுடைய ஓர் சிறிய பரதேசி கொண்டு வந்து கொடுத்தது மாத்திரந் தெரியும்; பின் யாதும் நமக்குத் தெரியா தென்றாள். இதைக் கேட்ட இருவரும் உடனே வீட்டில் நெருப்புப் பற்றியது; குழந்தை தொட்டிலில் கிடக்கின்றதே ஓடுங்களென்று ஆக்ஞை செய்து பின் பயம்வேண்டாம் குழந்தை வெளியில் வந்துவிடும் எனச் சுவாமிகள் திருவாய் மலர்ந்தவாறே ஈண்டு நிகழ்ந்தமையினாலும், குழந்தையை இவ்வம்மை கையிற் கொடுத்தவர் சிறிய வடிவினரும் இலங்கோடு கௌபீநருமாகிய சிறிய பரதேசியாக விருத்தலானும், நமது சுவாமிகளே மைந்தனை வெளிப் படுத்தித் தந்த பேரருளுடையாராகும்; ஆதலால் நாளையதினம் நம் பிள்ளையைக் கொண்டுபோய் சுவாமிகளுக்கு முன்பாகவைத்து அவர் நாமகரணத்தையே மைந்தனுக்கும் நாமகரணமாகச் சூட்டி வேறு காரியம் பார்க்கவேண்டு மென்று பேசி முடித்தனர். மறு நாட் காலையில் குழந்தையை எடுத்துக்கொண்டு சுவாமிகள் முன்னிலையிற்றானே அருணாசலமென்று நாமகரணஞ் சூட்டினர், இவ்வாறு செய்ததை தங்கள் வைணவ சமயத்துக்குரிய ஆசிரியர்களும் மற்ற ஞாதியர்களும் அறிந்து தங்கள் சமயத்துக் குரித்தல்லாத இந்நாமகரணத்தை மாற்றி வேறு பெயர் வைக்கவேண்டுமென்று தனித்தனிக் கூறியும் மாதா பிதாக்க ளெவ்வாறு செய்யாதிருப்பதை யறிந்து சுற்றத்தவர்களும், ஆசிரியர்களும், ஒருங்கு கூடிய ஓர் விசேட தினத்தில் ஆராவமுதையங்காரையும் அவர் மனைவியாரையும் அழைத்து உங்கள் பிள்ளைக்கு இடத்தகாத நாமமிட்டீர்கள்; - ஆதலால் அதை மாற்றிவிடுங்கள்; அங்ஙனஞ் செய்யாதொழியில் சாதிக்குப் புறம்பு படுத்துவோமென்றார்கள். அதற்கவ்விருவர்களும் நாங்கள் வைத்த நாமகரணத்தை நாங்களே மாற்றமாட்டோம்; ஆனாலப்பிள்ளை எனக்கு வைத்த நாமகரணத்தை நீக்கி இன்ன நாமகரணமிட்டு அழையுங்களென்றால் அப்படியே அழைக்கின்றோ மென்றார்கள். அதைக்கேட்டு நல்லதப்படியே யாகட்டுமென்று சபையார்கள் அப்பிள்ளையை யழைத்து எதிரே நிறுத்தி உன் பெயரென்னென்று கேட்க, மைந்தன் என் பெயர் அருணாசல மென்றனன். அச்சொல்லைக்கேட்ட சுற்றத்

தார்களும் ஆசிரியர்களும் உன் மாதா பிதாக்கள் வசனிக்கத்தகாத நாமகரணத்தை யுனக்குச் சூட்டினார்கள் நாங்களதை நீக்கி வெங்கடாசலமென நாமஞ் சூட்டுகிறோம் அதை நீ வகித்துக்கொள்வா யென்றார்கள், உடனே இளமைப் பருவத்தையுடைய அம்மைந்தன் ஆவேசமுற்று ஓர் புருடப்பிரமாணங் கிளம்பிக் குதித்து நின்று அச்சபையின் நான்கு பக்கத்துள்ளவர்களையும் மிக உக்கிரமாகப் பார்த்து, ஓ சபையோர்களே! அருணாசல மென்னு நாமத்திலுள்ள அகரம் அரிநாமத்தின் முதலட்சரமும், ரகர உகரம் திருவென்னும் பிராட்டி நாமத்திலுள்ள ஈற்றட்சரமும், ணகர ஆகாரம் நாராயணப் பெருமானது அஷ்டாட்சரமாகிய மந்திரத்தின் ஓர் அட்சரமும், அசலமென்பது நீங்கள் எனக்கிட வேண்டுமென நினைத்த வேங்கடாசல மென்னும் எம்பெருமான் வீற்றிருக்கும் தானமாகவு மிருக்க, அதை வாயினால் வசனிக்கத் தகாதென்றுரைத்தது அறியாமை யன்றோ ஆதலால் நுமது வாயை மூடுவீர்! மூடுவீர்! பேதபுத்தியை விடுவீர்! விடுவீர்! அல்லவெனிற் கெடுவீர்! கெடுவீர்! என்று சொல்லி மௌனமாக விருந்தான் உடனே சபையார் அவ்விளைஞன் வார்த்தையைக் கேட்டுப் பயமும் உடனடுக்கமும் மெய்வெயர்வு முடையவர்களாய் ஒன்றும் பேசாது மெள்ள மெள்ள எழுந்துபோய் விட்டார்கள் இங்ஙன மெழுந்து சென்ற ஞாதியர்கள் அவ்விருவரிடத்துள்ள துவேஷம் நீங்கி யிருந்தார்கள். அவர்களும் வைணவ சம்பிரதாயத்தைக் கைவிடாதவர்களும் சைவத்திற் றுவேஷ மில்லாதவர்களுமாயிருந்தார்கள்.

பின் ஓர் நாள் சுவாமிகளோடு பள்ளியிற் பயின்று வந்த ஓர் பிராமணப் பிள்ளை விடந்தீண்டி மூர்ச்சையாகி மணிமந்திர முதலிய அநேக பரிகாரங்களைச் செய்தும் நிவிர்த்தியாகாமல் பிரேதமாய்க்கிடக்க அயலூருக்குப் போயிருந்த அப் பிள்ளையின் தாயார் மருநாள் வந்து மைந்தன் இறந்து கிடப்பதைப் பார்த்து வயிறலைத்து அழுதுகொண்டு சுவாமிகளிடத் தோடி வந்து உன்னோடு பள்ளியிற் படித்த சுந்தரமாகிய ஒரு பிள்ளையையும் பாம்புக்கு இரையாகக் கொடுத்துவிட்டு யானுயிர் வைத்திருப்பேனோ! அவனை நீ பிழைக்கச் செய்யாவிடில் என்னுயிரை உன் முன்னிலையில் விட்டு விடுகிறேனென்று பூமியில் விழுந்து உயிர்விட முயலும் போது சுவாமிகளெழுந்து அம்மா! உன் குழந்தையை எழுப்பு

கிறேன் ! வருவாயாகவென்று அப்பார்ப்பனி வீட்டுக்குட்சென்று அங்கிருந்த ஓர் பிரம்பை எடுத்து அப்பா சுந்தரம் எழுந்திருவென்று சொல்லி தலையில் ஓரடியடித்தது. உடனே மைந்தனும் உயிர் பெற்றெழுந்தனன்.

இவ்வாறு சுவாமிகளிடத்தில் பல அற்புதங்கள் நடந்து கொண்டு வருங்காலத்தில் பிதாவாகிய சிவ சிதம்பரம் பிள்ளை கைகட்டி வாய் புதைத்து நின்று சுவாமின் ! என் மனைவியாகிய மீனாம்பிகை பிரேதமாயிருக்க யான் பாராதிருக்கும் வரந்தரல் வேண்டுமென்றும், சுவாமிகள் திருக் கரத்தால் எனது ஈமக் கடனை முடிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்வர் ; மாதாவும் அவ்வாறே சுமங்கலியாகவே யான் சரீரத்தை விடவேண்டுமென்றும் சுவாமிகள் திருக்கரத்தால் என் ஈமக்கடனை முடிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்வர் ; இங்ஙனமிருக்கு நாட்களில் ஒரு நாள் மாதா பிதாக்களிருவரையு மழைத்து நமது கருமம் இதற்கு எட்டாவது நாட் காலையில் முடிந்துவிடும்; நீங்கள் சிவ நாமத்தை உச்சரித்துக் கொண்டிருங்களென்றருள, அதைக்கேட்ட அவ்விருவர்களும் மிக்க வியாகூல சித்தர்களாய் பல பேர்களிடத்துங் கூறி சுவாமிகள் இதற்கு எட்டாவது நாட் காலையில் சமாதியடைந்து விடும்போலிருக்கின்றது என்று தெரிந்து கொண்டு தினந்தோறும் இடை விடாது சிவ நாமஞ் செய்துகொண்டிருந்தார்கள். எட்டாம் நாள் காலையில் ஞாதிகள் முதலிய பல பேர்களும் இன்றையத்தினம் சுவாமிகள் சமாதியடையப் போகின்றது என வந்து கூடியிருக்கும் போது, மாதா பிதாக்களிருவரும் சுவாமிகளுக்கெதிரில் சிவ நாமஞ் செய்துகொண்டு பக்தி விநயத்தோடிருந்தார்கள். அப்போது சுவாமிகள் எழுந்து இருவர் நெற்றியிலும் திரு நீறிட்டு அநுக்கிரகித்தது. அவ்வாறு செய்யவே மாதா பிதாக்களிருவரும் மூர்ச்சித்து கணப்பொழுதிற்குள் சிவ பத முற்றனர். பின்னர் ஞாதியர்கள் இருவருக்குஞ் செய்ய வேண்டியவைகளைச் செய்து மயானத்துக்குக் கொண்டுபோய் இருவருக்கும் ஒரே தானத்தில் சிதையடுக்கித் தீ மூட்டுதற்கான எத்தனஞ் செய்யவும் சுவாமிகள் ஸ்நானஞ்செய்து பின் சென்று கொள்ளியெடுத்துக் கொண்டு சுற்றிவந்து தலைப்பக்கத்தில் வைத்து விட்டு திரும்பி இன்ன திசையை நோக்கிச் சுவாமிகள் சென்றதென்று ஒருவரு முணராவண்ணம் ஓர் வெள்ளை வஸ்திரத்தோடு

வெளிப்பட்டுப் பல தேசங்களிலும் சஞ்சரித்துக் கொண்டிருக்குங் காலத்தில், ஓர் நாள் வைத்தீசுவரன் கோயிலுக்கு வந்தபோது அங்குச் சுவாமிகளின் ஞாதியர்களில் கோவிற் கணக்கராயுள்ள ஒருவர் கண்டு சுவாமிகளின் மகிமை யறியாது தம்பி நான் பத்து நாள் மருந்து சாப்பிடவேண்டி யிருக்கின்றது. கோவிற் கணக்கை எழுதுகிறாயா வென்று கேட்கச் சிவபணிவிடை தானே பார்க்கிறே னென்று ஒப்புக்கொள்ள, உடனே கணக்கையும் எழுத்தாணியையும் சுவாமிகள் கையிற் கொடுத்தார். சுவாமிகள் வாங்கிக் கொண்டு கணக்கு மேடையிலிருந்து மணியக்காரராதியர் வந்து எழுத வேண்டியவைகளைச் சொல்கிறதற்கு முன்னமே எழுத வேண்டியவைக ளனைத்தையும் எழுதிக் கணக்கைக் கட்டிவைத்து விட்டு நிட்டாபரராயிருக்கும். மணியக்காரராதியர் வந்து எழுதச் சொல்லும்போது எழுதியாயிற்று. கணக்கைப் பார்த்துக் கொள்ளுங்களென்று கூறும். அங்ஙனமே அவர்கள் கணக்கை யவிழ்த்துப் பார்க்கச் சரியாகவே யிருக்கும். ஓர் நாள் மணியக்காரர் கணக்கிலுள்ளபடி கோவிற்றிட்டத்தில் நாலுபடி பாலும், ஒருபடி தேனும் எழுதாதிருப்பதைப் பார்த்து ஏன் எழுதவில்லையென்று கேட்க, அதற்குச் சுவாமிகள் குருக்கள் பாலையுந் தேனையும் அபிடேகியாமல் வீட்டுக்குக் கொண்டுபோக வைத்திருக்கிறார் போய்ப் பாரென்றுரைக்கக் கேட்ட மணியக்காரர் கோவிலுட்சென்றுபார்க்கும்போது பாலுந் தேனும் இருந்தது. இங்ஙனம் சுவாமிகள் எழுதியுள்ள கணக்கினால் பால், தயிர், தேன், நெய், யாதியகளவும் உண்டியற் பணம் முடிப்பணை மாதிகளையும் மறைப்பவர்கள் களவும், விளக்கெண்ணெய் அரிசி முதலிய களவும், வெளியாய் விடுமென்றறிந்தனர். இவ்வற்புதத்தைக் கோவிலிலுள்ள அதிகாரிகள் யாவருந் தெரிந்து சுவாமிகளைக் கண்டபோது அச்சமுற்று ஆசாரத்தோடு எழுந்து கைகட்டி வணக்கத்தோடு நிற்பவர்களாயினார். இங்ஙனம் தன்னைக் கண்டவுடன் யாவரும் அச்சமுறுவதை சுவாமிகள் பார்த்து இந்தக் கணக்கை எழுதுவதினாலல்லவா யாவரும் நம்மிடத்து அச்ச முறுகின்றனரென்று கருதி உடனே அவ்வூரைவிட்டு வெளிப்பட்டு விட்டது. வெளிப்பட்ட சுவாமிகள் தென்றிசை நோக்கிச் சிற்சில வூர்களிற் சஞ்சரித்துக்கொண்டு அதி வீரராமன் பட்டிணத்தை யடைந்து தெருவிற் செல்லும் போது அவ்விடத்தில் உப்பளம் பேஷ்கா ருத்தியோகத் துள்ளா

ரும், வேளாண் மரபினருமாகிய சுந்தரம் பிள்ளை யென்பாரொருவர், தெருவிற் செல்லும் சுவாமிகளைப் பார்த்துப் பெரியாரென்றுணரா தழைத்து, உன் மரபியாதென வினவ, சுவாமிகள் கார்காத்த வேளாண் மரபென, அதற்குச் சுந்திரம் பிள்ளை நமக்குப் பூஜைக்கு இடம் பண்ணிக் கொண்டிருந்த பையன் ஊருக்குப் போய்விட்டான்; நீ நம்மோடு போசநஞ்செய்து கொண்டு நமது பூஜைக்கு இடம் பண்ணிக்கொண்டிருக்கில் பூஜா கைங்கரிய பலன் உனக்குங் கிடைக்கு மென்றனர். அதற்குச் சுவாமிகள், ஆன்மாக்களை நல் வழிப்படுத்தும் பெருங் கருணையராதலின் சம்மதித்து தினந்தோறும் பூஜைக்கு இடம் பண்ணிவைத்து விட்டுத் தான் ஒரு புறம் நிஷ்டையிலிருக்கும். இஃதிங்ஙனமாக சுந்திரம் பிள்ளை ஸ்நாந சந்தி முடித்துக்கொண்டு பூஜை செய்யும்போது அவர் குமாரி காந்திமதி என்னுங் கந்நிகை தேவார திருவாசக திருப்பாக்களைப் பிழையற இசையோடு ஓதிக்கொண்டிருப்பது வழக்கம். இங்ஙனம் நடந்துவரும் பூஜா காலத்தில் சிலபோது அசைவற நிட்டையிலிருக்கும் பிரக்ஞை வெளியில் வந்தபோது காந்திமதி பாடும் பாசுரங்களைக் கேட்டு கண்களில் நீர் பெருகப் பரவசமா யிருக்கும் பூஜை முடிந்தவுடனே சுந்திரம் பிள்ளை சுவாமிகளைச் சமீபத்தில் வைத்துக்கொண்டு போஜநஞ் செய்வார். சுவாமிகள் போஜநஞ் செய்தவுடனே ஊருக்குப் புறம்பேயுள்ள குளக்கரையிலிருக்கும் தாழை விருக்ஷ நிழலில் நிட்டைசெய்யும். சிலபோது சுவாமிகளைச் சுற்றிலும் வந்து பாம்புகள் படம் விரித்தாடிக் கொண்டிருக்கும். இங்ஙனமிருக்கும் காலத்தில் ஓர் நாள் பூஜைக்கு இடம் பண்ணி வைத்துவிட்டு வழக்கம்போல் நிட்டை புரியும் போது அநுபூதியிலழுந்தி விருத்தி வெளிப்படாமல் எட்டு நாள் வரையில் நிவாத தீபம்போல் நிலைபெற, உடலும் அசைவறத் தம்பம்போலிருந்து விட்டது. சுந்திரம் பிள்ளை சுவாமிகளைப் போசநத்துக்குப் பலமாகக் கூச்சலிட்டு அழைத்தும் சரீரத்தைப் பற்றி யலைத்தும் சுவாமிகளுக்கு விருத்தி வெளியில் வராமலிருந்து ஒன்பதாம் நாள் நிட்டை கலைந்து எழுந்தது. உடனே சுந்திரம் பிள்ளையும் அவர் மனைவியாரும் பாதத்திற் பணிந்து தம்பியென விளித்து வந்தவர்கள் சுவாமிகள் என விளித்து, யாங்கள் அறிவின்மையால் சுவாமிகளைச் சிறுவராக நினைத்துப் பூஜைக்கு இடம் பண்ணச்சொன்ன

எங்கள் தவறை மன்னிக்கவேண்டும்; இன்று முதல் சுவாமிகளுக்கு யாங்கள் பணிவிடை செய்து வருகிறோம் என்று கேட்டுக் கொண்டவர்களாய் அன்று முதற் சுவாமிகள் பூஜைக்கு இடம் பண்ணு முன்னமே தாங்களே பூஜைக்கு இடம் பண்ணிக்கொண்டு வருவார்கள். இவ்வாறு நடந்துவரும் நாட்களில் ஒரு நாள் சுந்திரம் பிள்ளை குமாரியாகிய காந்திமதி யென்பாள் காம வேட்கை பொருதவளா யிரவில் எழுந்து சென்று வெளியில் ஒரு திண்ணையிற் சயனித்துக் கொண்டிருந்த சுவாமிகளைக் கட்டி ஆலிங்கநம் செய்யவும் சுவாமிகள் விழித்துக் காந்திமதியின் கையை நெகிழ்த்துவிட்டுத் திண்ணையினின்றுங் கீழே குதித்துக் கண் குருடாய் விட்டதோ வென்று சொல்லிக்கொண்டு அவ்வூரை விட்டு வெளிப்பட்டுவிட்டது.

காந்திமதி தனது எண்ணம் நிறைவேறுமற் போய்விட்டதே என்னும் வியாகூலத்தோடு வீட்டில் வந்து சயனித்துக் காலையி லெழுந்தபோது கண் குருடானது மன்றி மார்பிலுள்ள தனங்களும் தோன்றுமல் மறைந்துவிட்டன. இந் நிகழ்ச்சியைத் தாய்க் கொளித்த சூலாவென்னும் பழமொழிப்படி மறையாது தாய்க் குணர்த்தினள். அதைக்கேட்ட தாய் வியாகூலத்தோடிருந் தாள். சுந்திரம் பிள்ளை பூஜைக்கு வழக்கப்படி தேவார திருவா சகப் பாக்களை ஓதுதற்குக் காந்திமதியை யழைக்க, மனைவியார் காந்திமதி உடம்பு அசௌக்கியத்தால் சயனித்துக் கொண்டிருக் கிறள் என்றுரைக்க, ஆனலிருக்கட்டுமென்று பூஜையை முடித் துப் பின் போஜநஞ் செய்யும்போது சுவாமியைத் தேட, மனைவி யார் சுவாமிகள் இரவிலே வெளிப்பட்டு யாண்டோ சென்று விட் டது என்றனள். அதைக் கேட்டுத் தேடிப்பார்க்க வேண்டு மென்று நினைத்துக்கொண்டு போஜநஞ்செய்து பின் தாம்பூலம் அருந்தும்போது மனைவி அருகில் வந்து இரகசியமாகக் காந்தி மதிக்கு நிகழ்ந்த ஆபத்தை ஒன்று மொளியாது உணர்த்தினள். அதைக்கேட்டு மிக்க வரந்தையுற்று ஞாநிகளிட்ட சாபம் ஞானி ளாலன்றி ஈசுவரனாலும் நிவர்த்திப்பதரிது; ஆதலால் அந்தச் சுவாமிகளைக் கொண்டே நீக்கிக்கொள்ள வேண்டுமென நினைந்து, மனைவியையும் மகளையும் வண்டியிற் பிரயாணப்படுத்தித் தாமும் சுவாமிகள் சென்ற திசையைப் பலபேரிடத்துங் கேட்டுக்கொண்டு பிரயாணமாய்ச் செல்லும்போது பட்டுக்கோட்டையினருகே ஓர்

மரத்தடியில் நிட்டை செய்து கொண்டிருக்கும் பெரியவரைக் கண்டு வணங்கி, எங்கள் மனக்குறை நீங்குமாவென்று வினவ, நீங்கள் தேடிச்செல்லும் குரு நாதனை நாளை மாலையிற் காண்பீர்கள். உங்கள் மனக்குறையும் ஒழியுமென்றார்.

அதைக்கேட்டு மறுநாள் அவ்விடத்தினின்று நீக்கிச்சென்று மாலையில் ஆவிடையார் கோவிலுக்கு வடபுரம் ஒழுகும் காட்டாற்றைக் கடக்கவும், ஓர் சிறிய குளத்தினருகே நிற்கும் விருக்ஷ நிழலில் சுவாமிக ளிருக்கக் கண்டு இவர்கள் வண்டியைவிட் டிறங்கிச் சுவாமிகள் பாதத்தில் காந்திமதியை நமஸ்கரிக்கச் செய்து தாங்களும் வணங்கி சுவாமின்! சிறியாளாகிய காந்திமதி செய்த குற்றத்தை மன்னித்தருளல் வேண்டும். சுவாமிக ளருள் புரியாதொழியில் யாங்கள் உயிருடன் வாழ்வது சிறப்பில்லை ஆதலால் எங்கள் குறையை நீக்கி யருளவேண்டு மெனப் பன்முறை கேட்டுக்கொள்ளும்போது காந்திமதியும் அங்ஙனமே கேட்டுக் கொள்ளவும் சுவாமிகள் கிருபை கூர்ந்து அருகேயிருந்த சலத்தை யள்ளிக் காந்திமதியின் முகத்திற் றெளித்துச் செல்லுங்களென்று கட்டளையிட்டு விட்டுச் சுவாமிகள் எழுந்து ஊருக்குட் செல்ல காந்திமதிக்கு முன்போல் கட்பார்வையும் தனங்களும் தோன்றின. மாதா பிதா புதல்வியாகிய மூவரும் சுவாமிகளை விடாது, பின்றொடர்ந்து செல்ல, சுவாமிகள் கோவிலிற் சென்று விநாயகர் சந்நிதானத்தில் நிட்டாபரரா யிருந்தது. பின் றொடர்ந்து சென்ற சுந்தரம் பிள்ளை சுவாமிகள் நிட்டை கலைந்து வெளிப்படு முன்னமே சமையற் செய்து வைத்திருந்து வெளிப்பட்டவுடன் அமுதருந்தச் செய்ய வேண்டுமென்று கருதித் தீர்த்தத்தில் மூழ்கிச் சமீபத்திலுள்ள தம்பிரான் சுவாமிகள் மடத்திலுள்ள ஓர் சாகையில் மனைவியையும் புத்திரியையும் சமையல் செய்யும்படி செய்து தானும் ஸ்நான சந்தி முடித்துக்கொண்டு அன்னங் கறி முதலியவைகளை எடுப்பித்துக்கொண்டு சுவாமிகளிடஞ்செல்ல எத்தனிக்கும்போது வெளியிற் சென்றிருந்து வந்த அம் மடத்துக்குரிய கட்டளைத் தம்பிரான் பார்த்து மடாபிமானிகளாகிய நீவிர் மடத்திற் போசனஞ் செய்து கொள்ளாமற் றனிச் சமையல் செய்தற்கும், செய்யப்பட்ட அமுது கறியாதிகளை வெளியிற் கொடுபோதற்குங் காரணமென்னை யென வினவச் சுந்தரம் பிள்ளை முன் நடந்த விருத்தாங்

தங்களனைத்தையும் ஒன்றொழியாது தம்பிரானிடத்துத் தெரிவித்தனர்.

அதைக்கேட்ட தம்பிரான் ஆச்சரியமுற்று நேற்றிரவு நமது கனவில் ஓர் பிராமணன்போற்றோன்றி நாளைய தினம் ஒரு முனிவன் வருகின்றான், அவனை நீ தரிசித்தனையாயின் உனது குன்மநோய் நீங்கிவிடும்; நமது பெயர் ஆத்மநாத சாஸ்திரி யென்று சொல்லி மறைந்தனர், அதைச் சொற்பனந்தானே யென்று உபேக்ஷயாக விருந்தேன்; இப்போது யோசிக்குமிடத்து உங்களாற் சொல்லப்பட்ட சுவாமிகள் தான் சொற்பனத்தில் பிராமணராற் சொல்லப்பட்ட முனிவரென் றெண்ணுகின்றேன், ஆத்ம நாத சாஸ்திரியெனப் பெயர் கூறினமையால் அவர் நமது ஆத்மநாதரே யென்றுந் துணிகின்றேன். ஆதலால் யானும் உடன் வருகின்றே னென்றுசொல்லி ஸ்நாநாநுட்டாநங்களை முடித்துக் கொண்டு உபசாரத் திரவியமாகக் கற்கண்டு, வாழைப்பழ முதலிய பழ வர்க்கங்களையு மெடுப்பித்துக்கொண்டு தானும் கூடவே சென்று விநாயகர் சந்நிதியில் நிட்டையிலிருக்குஞ் சுவாமிகளைக் கண்டு உளத்தின்கண்ணெழும் பேருவகைக் கடற் படிந்து நிட்டை கலையும் பரியந்தம் ஓர் புடையொதுங்கி நின்று சுவாமிகள் நிட்டையிலிருந்து விழித்தவுடனே சுந்திரம் பிள்ளை செம்பில் சலங்கொண்டு போய்ச் சுவாமிகள் திருமுன் சென்று பிக்ஷை செய்தருளவேண்டு மென்று விண்ணப்பித்தனர். சுவாமிகளதற் குடன்பட்டு எழுதலும் உடனே கையிலிருந்த சலத்தால் சுவாமிகள் பாதத்தை விளக்கி உலர்ந்த வஸ்திரத்தால் நீரொற்றி ஆதநத்தி லெழுந்தருளச் செய்தனர். அப்போது சுந்திரம் பிள்ளை மனைவியார் இலை பரப்பி நீர் தெளித்து அறு சுவை யுண்டிகளையும் உடனே படைத்தனர். படைக்கவும் தம்பிரான் ஆக்ஞைப்படி பிராமணன் கொண்டு வந்திருந்த ஆத்மநாதருடைய பிரசாதமாகிய சருக்கரைப் பொங்கலைத் தம்பிரான் தனது கையால் சுவாமிகளிலையிற் படைத்து எம் பவப் பிணியையொழித்தற் பொருட்டு எழுந்தருளிய குருவே அடியேனை! நெடுநாளாய்த் துன்புறுத்தும் இவ் வுடற் பிணியையும் நீக்கியருளல் வேண்டுமென விண்ணப்பித்தனர். உடனே சுவாமிகள் சருக்கரைப் பொங்கலிற் சிறிதெடுத்து இதை யுட்கொள்வாயாகில் உன்னோய் நீங்கிவிடு மென்று தம்பிரான் கையிற் கொடுத்துப் பின் சுவாமிகளும் பிட்சை செய்து முடிகிறதற்கு முன்னரே தம்பிரா

னுக்கு நெடுநாளாயிருந்த குன்மநோய் அப்போதே நீங்கி அதனால் அவர் ஆநந்த பரவசராய்ச் சுவாமிகள் பிக்ஷை செய்து எழுந்த பின் சுவாமிகளினது பரிகலச் சேடத்தையும் உட்கொண்டனர். அங்ஙனம் சுந்தரம் பிள்ளை மனைவி புத்திரி ஆகிய மூவரும் பரிகலச் சேடத்தை யுட்கொண்டார்கள். பின்பு சுவாமிகள் முன்னர் தம்பிரான் வணக்கத்தோடு அடியேனுக்குச் சுவாமிகள் கொடுத்த பிரசாதத்தைப் புசித்த அளவில் நெடுநாளாக வென்னைத் துன்பப் படுத்திய குன்மநோய் சூரியனைக் கண்ட பனிபோல விலகிவிட்டது சுவாமின்! தங்கள் பாதத்தைத் தரிசிக்கவும் பரிகலச் சேடத்தை யருந்தவும் பெற்ற அடியேனுக்குப் பவப் பிணியும் நீங்கி விடு மென்பதிற் சந்தேக முளதோ? இல்லை! என்னுண்டவனே என்று பலவாறு தோத்திரஞ் செய்து வலம் வந்து வணங்கி ஆநந்த பரவசராய் நின்று இவ்வளவு பெருங்கருணை புரிந்த சுவாமிகளை விட்டிருத்தற்கு அடியேன் மனம் பொருது; ஆதலால் இவ் விடத்திலேயே வசிக்கவேண்டு மென விண்ணப்பித்தனர். அப் போது சுந்தரம் பிள்ளை எமது குல தெய்வமாகிய சுவாமிகள் அதிவீரராமன் பட்டினத்துக்கு எழுந்தருள வேண்டுமென்று பலதரம் விண்ணப்பித்தனர். இவ் விருவர்கள் வேண்டுகோட்கும் விடையாகச் சுவாமிகள் இவ னிங்குமிரான், அங்கும் வரான் என் றருளியது. இவ்வாறருளி ஆண்டு இராத் தங்கி விடியற் காலத் திற்கு முன் வெளிப்பட்டு விட்டது. இங்ஙனம் வெளிப்பட்ட சுவாமிகள் பல வூர்களிலும் பல காடுகளிலுஞ் சஞ்சரித்துக் கொண்டு வருங் காலத்தில் தொண்டமான் புதுக்கோட்டையை அடுத்த திருக்கோகரணத்துக்குச் செல்லும் மார்க்கத்தில் ஓர் குளக்கரையில் தான் செய்த பாப கர்ம பலத்தால், உதிரமாடன், இரத்த சாமுண்டி, பிர்மராட்சதை முதலிய துட்ட தேவதை களால் பிடிக்கப்பட்டு அறிவு மயங்கி மார்க்கத்திற் செல்லுபவர் களைப் பலவாறு வைதலும் மேல் விழுந்து கடித்தலும் கல்லா லெறிதலும் மல சலங்களைக் கையிலேந்தி மேலே வீசுதலும் ஆகிய இப்படிப்பட்ட பல துன்பங்களை இழைத்துக் கொண்டு ஓர் பேயன் இருந்தான். அவனிருக்கும் மார்க்கத்தில் சுவாமிகள் செல்லப் பார்த்தவர்கள் ஐயா நீவிர் செல்லும் மார்க்கத்தி லுள்ள குளக் கரையில் ஓர் பேய னிருக்கிறான்! அவன் மார்க்கஸ்தர்கட்குப் பல துன்பங்களைச் செய்கின்றனன். ஆதலால் வேறு வழியாகச்

செல்வீரென்று பலவாறு வற்புறுத்திக் கூறியும் சுவாமிகள் பதிலுரையாடாது அக் குளக் கரைக்கு நேராகவே செல்லும்போது, அப் பேய்க்கோட்பட்டான் சுவாமிகளை அடிக்கக் கல் முதலியவைகளை எடுத்துக்கொண்டு ஓடி வந்தனன். அவன் வருவதைச் சுவாமிகள் பார்த்து நகைத்தது, உடனே மருளன் மருணீங்கி, எறிதற்கெடுத்த கல் முதலியவைகளைக் கீழே போட்டு விட்டு சுவாமிகளை நமஸ்கரித்து எழுந்து பலவாறு தோத்திரஞ் செய்து சுமார் இருபது வருட காலமாக வென்னை வருணாச்சிரம தருமங்களை விடுத்து மகா பாபத் தொழில்களைச் செய்யும்படி செய்த துட்ட தேவதைகள் உமது புன்னகையினாலும் கிருபா வீட்சணியத்தினாலு முற்காலத்திற் சிவ பெருமான் புன்னகையால் ஒழிந்த திரிபுரம் போலாயின. ஆயினும் நீண்ட காலமாகச் சாதிப் பிரஷ்டனாகிய என்னால் செய்யப்பட்ட பாபங்கள் நரகி லமிழ்த்திவிடுமே! அன்றியு மெனக்குப் பிராமணத்துவம் உண்டோ! இல்லையோ வெனப் பய பக்தியோடும் வணங்கிக் கேட்க, சுவாமிகள் உனது செயல் மறந்து துர்த் தேவதைகளின் வசத்தாய் நின்று நின்னாற் செய்யப்பட்ட பாப கர்மங்கள் உன்னை நரகத்தி லமிழ்த்தா, உனக்குப் பிராமணத்துவம் உண்டு; அஞ்சாதே யென்று திருவாய் மலர்ந்தது.

பின்னர் அவ்விடம் விட்டு நீங்கிப் பல ஊர்களிற் சஞ்சரித்துக் கொண்டு ஒரு நாள் இரவில் விராலி மலைக்குச் சென்றபோது பெரு மழை பெய்ய அதற்கு ஒரு தாசி வீட்டுத் திண்ணையில் ஒதுங்கி யிருந்தது. சுவாமிகள் பசியோடிருப்பதை விராலிமலை முருகக் கடவுள் அறிந்து அர்த்த சாமத்தில் தனக்கு நிவேதனமாகிய சருக்கரைப் பொங்கலைத் தாம்பாளத்தோடு எடுத்துக் கொண்டு ஒரு சிறிய பிராமணப் பிள்ளை வடிவமாக வந்து அப்பா வென விளித்து இவ் வன்னத்தைப் புசிப்பா யென்று கொடுத்து விட்டு மறைந்தருளினார்; சுவாமிகள் அவ் வன்னத்தில் சிறிது புசித்து மற்றையதை அத் தட்டோடு தள்ளி வைத்து விட்டு நிட்டையிலிருந்தது. கோவில் அர்ச்சகர், புதுக்கோட்டை தாசில்தார் சுவாமியின் அர்த்தசாம நைவேத்தியப் பிரசாதங்கொண்டு வரும்படி தெரிவித்திருக்கின்றமையால் கொண்டுபோக வேண்டுமென்று மழை நீங்குகிற வரையிலிருந்து பின் பிரசாதத்தை எடுப்பதற்கு வைத்த விடத்திற் பார்க்கும்போது இல்லாமையால் மணி

யக்காரரிடத்தில், நீர் சொல்லியபடி தாசில்தாருக்கு அனுப்ப கோவிலிலுள்ள தாம்பாளத்தோடு வைத்திருந்த பிரசாதம் காணப் படவில்லை எவனோ திருடிக்கொண்டு போய்விட்டான் என்று சொற்றனர்; அதைக் கேட்ட மணியக்காரர் இங்கு ஒருவரும் வரவில்லை; சுயம்பாகிப் பிராமணன் தாசிவீட்டுக்குக் கொண்டுபோயிருப்பான்; பரிசோதிக்க வேண்டுமெனத் தீவர்த்தி வெளிச்சத்தோடு காவற்காரர்களை அழைத்துக் கொண்டு சென்றபோது தாசி வீட்டு கதவு சாத்தப்பட்டிருந்தது. வெளித் திண்ணையிற் சொற்ப பிரசாதத்தோடு தாம்பாளமும் பக்கத்தில் சுவாமிகளும் இருப்பதைக் கண்டு சுவாமிகளை நீ யாரடா? இந்தத் தாம்பாளமும் பிரசாதமும் உனது பக்கலிருக்கக் காரணம் என்னென்று வினவ, சுவாமிகள் யாரோ ஒரு பிராமணக் குழந்தை நம்மை விளித்து இவ்வமுதைப் புசிப்பாயாக வென்று கூறிக்கொடுத்துப்போயிற்று. அதை நாம் வேண்டிய அளவு புசித்து எஞ்சியதை வைத்துவிட்டோமென் றியம்பிற்று. எதிர்த்த திண்ணையில் படுத்திருந்தவர் இவ் வமுதைப் புசிப்பாயாக வென்ற சொல் எங்கள் காதிலும் கேட்கப்பட்டது. வசித்த புருடன் யாரோ காணப்படவில்லையென்றார்கள். மணியக்காரர் இவனைத் திருடனென்று மதித்தற்கு நியாயமில்லை; ஆயினும் இவைகளைத் தாசில்தாரிடத்திற் றெரிவிக்க வேண்டுமென்று சொல்லுவதற்கு முன்னமே நித்திரையிலிருந்த தாசில்தார் சொற்பனத்திற் முருகக் கடவுள் ஓர் பரதேசியாகவந்து அப்பா உனக்காக அர்ச்சகர் வைத்திருந்த அமுதை யான் திருடித் தாசி வீட்டுத் திண்ணையிற் பசியோடிருந்த ஞான தீரனாகிய முநிவனுக்குக் கொடுத்து விட்டேன். அம்முனிவன் புசித்து மீதம் வைத்திருக்கின்றான். அவ்வுச்சிட்டத்தைச் சீக்கிரத்திற் சென்று புசிப்பாயாகில் உனக்குள்ள சிரநோயும் காசநோயும் அப்போதே நீங்கிவிடும், நாம் மலைக்குச் செல்கின்றோம் என்றருளிச் செய்து மறைந்தனர்.

இங்ஙனம் கனாக்கண்ட தாசில்தார் விழித்து முருகக்கடவுளே சொப்பனத்தில் வந்தவராகும்; நாம் தாசி வீட்டுத் திண்ணையிலிருக்கும் முநிவரைத் தரிசித்து, அவர் உச்சிட்டத்தையும் புசிக்க வேண்டுமென் றெழுந்தபோது, மணியக்காரர் வந்து நடந்ததைத் தெரிவிக்க, அதைக் கேட்ட தாசில்தார் மிகுந்த அன்போடும் அதி விரைவாகச் சென்று தாசி வீட்டுத் திண்ணையிலிருக்கும்

சுவாமிகளை நமஸ்கரித்து எழுந்து மிகுந்த வணக்கத்துடன் நின்றனர். சுவாமிகள் அவரைப் பார்த்து இவ் வமுதை நீ புசிப்பாயெனவும், மீண்டும் நமஸ்கரித்து எழுந்து அப் பிரசாதத்தையெடுத்து மிக்க ஆதரவோடு உட்கொண்டனர். அந்த உத்தரக்ஷணமே கீரு கீரென்று இழுத்துக்கொண்டிருந்த காச நோயும் ஒருத்தலை நோயும் நீங்கிவிட்டது.

உடனே தாசில்தார் சந்தோஷ சித்தராய் சிரசிற் குவித்த அஞ்சலியோடு எதிர் நின்று உரோகியாகிய வென்னைக் கண்போதிற் றேவரீர் உச்சிட்ட மாத்திரத்தால் அரோகி யாக்கின உமது மகிமையை என்னு லெங்ஙனம் அளவிடற்பாலதாம், என்னைத் தடுத்தாட் கொண்ட வள்ளலே! யெனப் பல வாறு துதித்துச் சுவாமிகளுக்கு அடியேன் தொண்டு செய்துகொண் டிருக்கும்படி உத்தரவு செய்யவேண்டு மென விண்ணப்பித்தனர். அதற்குச் சுவாமிகள் முருகனுக்குத் தொண்டு செய்வாயாக வென்று திருவாய் மலர்ந்தருளிற்று.

பின் சில தின மங்கிருந்து ஓர் நாள் வெளிப்பட்டுப் பலவூர்களிலும் சஞ்சரித்துக் கொண்டு பற்பல திருவிளையாடல்களை ஆண்டாண்டு நடாத்தி இராஜமன்னார் குடியில் வந்திருக்கும் காலத்தில் இராஜகோபால சுவாமி கோவிலிற் சென்று சந்நிதியில் நிட்டையிலிருக்கும் போது, பூசை செய்ய வந்த அர்ச்சகர் சுவாமிகளைப் பார்த்து யாரடா சூத்திரா! நீ கோபாலன் சந்நிதியில் வந்து குந்தியிருக்கின்றாய்! எழுந்து வெளியிற்போ, போவென்று அதட்டிச் சொல்வதைக் கேட்டுச் சுவாமிகள் பூசகனைப் பார்த்து நீ கோபாலன் திருமேனியைத் தீண்டி அர்ச்சித்தற் கருக நல்ல; சூதகனானையென்று சொல்லிக்கொண்டு வெளியே போய்விட்டது. உடனே பூசகன் மனைவியார் குளிக்கப்போய் வழுக்கிக் குளத்தில் விழுந்து இறந்து விட்டனளென்று ஆள் வந்து சொல்லவும் பூசகர் வெளியிற் சென்றுவிட்டனர். அப்போது அங்கு நிகழ்ந்ததைக் கண்ணுற்ற சிலர்கள் பூசகனைச் சூதகனானையென்று சொல்லி வெளியில் போந்தவர் சோதிட வல்லவரோ? அல்லது திரிகாலவுணர்வுடைய ஞானியோ? என வியந்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு அவரைப் பார்ப்போ மென்று வெளியிற் சிலர் ஓடிப் பார்க்கக் காணாமையின் இவர் அசரீரியாகிய கடவுளரே போலுமென மேலும் வியந்து கொண்டு நின்றார்கள்.



தேசிய நூலகம் ... 1105 ... 33219

பின்னர் வெளியிற் போந்த சுவாமிகள் சிற் சில வூர்களில் சஞ்சரித்துக் கொண்டு நீடா மங்கலத்தி னாற்றங்கரைப் படுகையில் வந்திருக்கும் போது, ஓர் நாட் பதினொன்கு வயதினையுடையவோர் வடுகச் சிறுவன் மாலைப்போதில் ஆற்றங்கரைக்குச் சென்றபோது, ஆண்டோர் பெரிய சர்ப்பமானது படம் விரித்துச் சீறிக்கொண்டு சிறுவனைத் தீண்டற்குத் துரத்தவும், சிறுவன் பயந்து அலறிக்கொண்டு ஆங்கோர்பால் நிட்டையிலிருக்கும் சுவாமிகள் முன்னர் ஓடி வந்து வீழ்ந்தனன். சுவாமிகள் கண்டிறந்து ஓடி வருஞ் சர்ப்பத்தைக் கையமர்த்தி நல்ல பிள்ளையைத் தீண்டாதேயென்று கூறவும், உடனே சர்ப்பம் படத்தைச் சுருக்கிக்கொண்டு திரும்பித் தானிருக்கு மிடத்துக்குச் சென்று விட்டது. அப்போது சிவறுனழுதுக் கொண்டு வீட்டுக்குப்போகப் பயமாயிருகிறதே! யென்செய்வே னென்றனன். அச் சிறுவன் வார்த்தைக்கைக் கிருபா சமுத்திரமாகிய சுவாமிகள் கேட்டு ஓர் மரத்தைப் பார்த்து ஓ வநவாசியே இச் சிறுவனை வீட்டிற் கொண்டுபோய் விட்டு வருவாயென ஆக்ஞாபித்து விட்டுப் பின்னுங் கண்களை மூடி நிட்டையிலிருந்தது. உடனே அம்மரத்திலிருந்த சடா முநியானது சிறுவனுடைய பிதா வடிவங்கொண்டு வந்து சிறுவனையழைத்துக் கொண்டு வீட்டினருகே சென்று சிறுவனை நீ வீட்டிற்குட் செல்வாய், நான் பெருமாள் சேவை செய்துகொண்டு வருகிறேனென்று கூறிவிட்டு மறைந்தது. சிறுவன் வீட்டினுட்சென்று தன் மாதா விடத்திற்றான் ஆற்றங் கரைக்குச் சென்றதும் ஆங்கு நிகழ்ந்ததையும் கூறிப் பின்பு என்னை நாயினுவந்து அழைத்துக் கொண்டு வந்தாரெனக் கூறினன். அவ் வார்த்தையைக் கேட்ட தாயார் நாயினு வெங்கே யென்றனள்; அதற்குச் சிறுவன் நாயினு பெருமாள் சேவைக்குச் சென்றிருக்கின்றார் வருவா ரென்று சொல்லிக் கொண்டிருக்கும்போது மன்னார் குடிக்குச் சென்ற பிதாவானவர் வந்தார். வந்தவரை மனைவியார் பார்த்து நமது பிள்ளை சென்ற விடத்தை யெப்படித் தெரிந்து அழைத்து வந்தீர்களென வினவ, அவர் நானிப்போதுதான் மன்னார்குடியிலிருந்து வருகிறேன். பிள்ளை சென்றவிடத்தை யான் தெரிந்தது மில்லை அழைத்துவரவு மில்லையே யென்றனர். அப்போது சிறுவன் பிதாவைப் பார்த்து என்ன நாயினு, ஆற்றங்கரையில் அழுது கொண்டிருந்த என்னை யழைத்துக்கொண்டு வந்து வீட்டில் விட்டு

விட்டுப் பெருமாள் சேவை செய்து வருகிறேனென்று சென்ற நீங்களிப்போது இங்ஙனஞ்சொல்லுகிறீர்களேயென்று கேட்கவும், பிதா ஆற்றங்கரையில் நிகழ்ந்த தென்னை? நீ கூறென்று கேட்கப் பிள்ளையானவன், ஆங்கு நிகழ்ந்ததைக் கூறினன். பிதாவானவ ரிவ்வற்புதத்தைக் கேட்டு மிகுந்த ஆச்சரியமுற்று அப் பெரியாரைத் தெரிசிக்க வேண்டுமென நினைந்து சிறுவனோடு மற்றுமுள்ள மனைவியாராதிய சிலர்களை யழைத்துக்கொண்டு சென்று பார்க்கும்போது, சுவாமிகள் நிட்டையிலிருந்தது. நிட்டையிலிருக்குஞ் சுவாமிகளை நமஸ்கரித் தெழுந்து சமீபத்திற் செல்லாமல் நின்று யென் பிள்ளையை விடத்தால் மரிக்காம லிரட்சித்த கடவுளே! வனத்திலுள்ள தெய்வங்களும் ஏவற்பணி செய்யத் தக்க சுவாமிகளை இத் தேவரென்று அறிவிலியாகிய யான் எங்ஙன மதித்தறிவேனெனப் பலவாறு துதித்து எனது பிள்ளையைச் சுவாமிகள் நல்ல பிள்ளையெனக் கூறினமையா லங்ஙனமே நான் நல்லய்யனெனப் பெயரிட்டுக் கொண்டனனென்ன விண்ணப்பித்துப் பின் காலையில் வந்து தெரிசித்துக் கொள்ளலாமென்று சொல்லிக்கொண்டு வீட்டுக்கு வந்து விட்டனர்.

அதன் பின்னர் மற்றுநா ளவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் கிழக்கேயுள்ள பழங்களத்தூ ரென்னுமோர் சிற்றூரிற் செல்லும்போது ஆங்கு ஓர் பெண் பூரணக் கருப்பவதியாகிப் பிள்ளை பிரசவிக்காமல் நான்கு திநமாக அவஸ்தைப் படுவதால் தாயுமிறந்து சிசுவு மிறந்து போமென்று வீட்டிலழுது கொண்டிராநின்ற உடையார் மரபினராகிய ஒருவர் ஆற்றங்கரையின் மார்க்கமாய்ச் செல்லுஞ் சுவாமிகளைப் பார்த்துச் சீக்கிரமாக ஓடிவந்து நமஸ்கரித்துச் சுவாமிக ளிரண்டு பாதங்களையும் பிடித்துக் கொண்டு சுவாமி! என் மனைவி கருப்பவதியாகி நான்கு திநமாகப் பிள்ளை பிரசவிக்காமல் அவஸ்தைப் படுகிறாள். இரண்டு நிமிடத்துக்குள் இறந்து விடுவாள் போற் றோன்றுகிறது; அவளிறந்தால் யானும் இறந்து விடுவே னாதலாற் சுவாமிகள் தாயுஞ் சிசுவும் பிழைக்கும்படி கிருபை செய்ய வேண்டுமென முறையிட்டழுவதைச் சுவாமிகள் பார்த்து நீ போய் பார்க்கும் முன்னமே ஆண் குழந்தை பிரசவித்துவிடும், உயிர்ச்சேதம் வராது, சென்று பார்ப்பாயென்று சொல்லவும், அவ்வுடையாரெழுந்தோடி வீட்டின் வாசற்படியிற் கால்வைக்கவும், சுவாமிகள் கூறியவண்ணமே ஆண்

குழந்தை பிரசவித்தது. அதைக்கேள்வியுற்ற உடையார் அடங்கா மகிழ்வை யுடையவராய்ச் சுவாமிகள் கூறியதை யங்குள்ளார்க்குக் கூறிப் பின்னும் சுவாமிகள்பால் வரவும், அங்குள்ள பலர்களும் சுவாமிகளைத் தரிசித்தற்கு வந்தனர். இவர்கள் வருவதற்கு முன்னர் சொற்பதூரம் சென்று ஓர் அரச மரத்தடியிலிருந்து நிட்டை கூடியது! தரிசிக்க வந்தவர்கள் பால் பழ முதலியவற்றை வரவழைத்து வைத்துக்கொண்டு சுவாமிகள் நிட்டையில் நின்றும் வெளிப்படும் பரியந்தமிருந்து வெளிப்பட்ட பின்னர் பால் பழ முதலியவற்றை முன்னர் வைத்து நமஸ்கரித்து அவைகளை யுட்கொள்ள வேண்டுமெனப் பலர்களும் பன்முறை வேண்டினர். அவ்வேண்டு கோளுக்கிரங்கி யவைகளிற் சிலவற்றை யருந்திப் பின்னும் நிட்டை கூடியிருந்து இரவில் அவ்விடம்விட்டு வெளிப்பட்டது.

இங்ஙனம் வெளிப்பட்ட சுவாமிகள் சிற்சில வூர்கள் நதிதீரங்கள் வனங்களிற் சஞ்சரித்துக்கொண்டு தன் சகோதரராகிய நமச்சிவாய சுவாமிகள் வசிக்கும் நீலப்பாடியில் வந்திருந்தபோது, ஓர் நாள் நமச்சிவாயசுவாமி யங்குள்ள பெரியவரிடத்தில் சிவஞான போதம் பாடங்கேட்டுக் கொண்டிருக்குஞ் சமயத்தில் சுவாமிகளோர்பாற் சென்றிருந்தது. அதைக் கண்ணுற்ற பெரியார் இவன் சைவசமயத் தீக்ஷைகளில்லாதவனும் சிவபூசையாதிய ஆசார நியமமில்லாதவனுமாகக் காணப்படுகின்றமையால் இவன் முன்னர் சாத்திரபாடஞ் சொல்லப்படாதென்று தான் நடத்திவந்த பாடத்தை நிறுத்தினர். அதனைச் சுவாமிகள் தெரிந்து தம்பியை நமச்சிவாய வென்றழைத்து, ஐந்தோலையும் எழுத்தாணியும் கொணர்ந்து கொடென்றருளியது. அங்ஙனமே கொணர்ந்து கொடுக்கச் சுவாமிகள் வாங்கி அவ்வோலைகளை வாரியேடாகச் சேர்த்து முகப்பில் சிவஞானபோதச் சிந்தநமெனப் பெயரெழுதி அவ்வேட்டில் சிவஞான போதத்தைச் சிந்திக்கும் முறையைத் தெளிவாக வெழுதிமுடித்துப்பின் நமச்சிவாய சுவாமிகளிடத்திற் கொடுத்து இதிலுள்ளபடி சிந்தநஞ் செய்து வருவாயானால் சிவஞானபோத மென்னும் நூலை முறையே கேட்டுச் சிந்தித்தலினால் வரும் பயனை எளிதிலடையலாமெனக் கட்டளை யிட்டருளியது. அக்கட்டளையைச் சிரமேற்றாங்கிய நமச்சிவாய சுவாமிகள் அவ்வேட்டைத் தனக்குப் பாடஞ் சொல்லும் பெரியோரிடத்துக்

கொடுத்தனர். அவர் அதை வாங்கிப் பார்த்து பரம்பரையாக வுணர்ந்த பெரியோர்களாலும் அறியப்படாத அநுபூதிமயமான அரும்பொருட்கள் வேதத்துக்கும், ஆகமத்துக்கும் விரோதமின்றி எளிதில் விளங்க வரைந்திருப்பதை அறிந்து ஆச்சரியமுற்று சிவாநுபூதி யுடையராயன்றோ இருக்கின்றார்! நாம் இச்சிவஞானச் செல்வரை எளிதாக நினைத்தோமே! ஆ! ஆ!! இது என்ன பாவமென்று மிகவும் உடல் பதற மெய் வெயர்ப்பச் சீக்கிரமெழுந்து சுவாமிகளை நகஸ்கரித்து, அடியேன் சுவாமிகளை சமயாநுட்டான ஆசாரமில்லாதவரென் றவமதித்துப் பாடத்தை நிறுத்திய குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று பயபக்தி விசுவாசத்தோடு கேட்டுக்கொண்டார்.

பின்னரும் அவர்களால் உபசரிக்கப்பட்டு அவ்விடத்திலேயே இருந்து வரும்போது அவ்வூரிலுள்ள சிதம்பர முதலியாரென்பவர் ஐம்பது வயது பரியந்தம் தமக்குப் புத்திரப் பேறின்மையால் மடத்திலிருக்கும் பெரியோரிடம் வந்து, ஸ்வாமிகள் முன் சொல்லிய வண்ணம் இராமேச்சுரமாதிய ஸ்தலயாத்திரைகளும் தநுக்கோடி முதலிய தீர்த்த ஸ்நாநங்களையும் நாகப்பிரதிட்டை தண்ணீர்ப் பந்தல், அன்னதாநம் முதலியவை செய்தும் புத்திரோற்பத்திக்கு விக்கிநமாக இருக்கும்படி பூர்வம் என்ன பாபம் செய்தேனோ? அது பிராயச்சித்தத்தால் நீங்குமோ நீங்காதோ? அது நீங்குவதற்கு யாதொரு பாயமும் சாத்திரங்களிற் கூறவில்லையோ வென்று கேட்க, அம்மடத்துச் சுவாமிகள் அதற்கு எவ்வகைப் பாபமாயினும் நிவர்த்தியாதற்குச் சாத்திரங்களில் கூறிய ஓர் சிறப்பு விதியையான் கூறுகின்றேன் கேட்பாயாக அஃதாவது :— பிரஹ்மஞ்ஞாநியாகிய ஓர் மகானுக்குப் பிச்சை செய்வித்து அவருண்ட பரிகலச் சேடத்தைப் புசித்தால் நீங்கிவிடும், ஆதலால் நீ அதையுஞ் செய்து முடிப்பாயென்று கூறினார். அதைக்கேட்ட சிதம்பர முதலியார் அத்தகைய ஞாநியை நானெப்படித் தெரிந்து கொள்வே னென்றுரைக்க, உன்னைக் கிருதார்த்தனுக்கும் பொருட்டே போலும் இப்போது நமது மடத்தில் பிரஹ்மஞ்ஞாநியாகிய ஓர் முநிவரர் வந்திருக்கின்றனர், அவருக்கு நாம் சொல்லியபடி செய்வாயென்று கூறி சுவாமிகளைத் தெரிசிப்பிக்க முதலியாரை அழைத்துக்கொண்டு சுவாமிகள் திருமுன் சென்று நமஸ்கரிப்பித்துக் கைகட்டி நின்று

இம் முதலியார் பிக்ஷையை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். முதலியாரும் அன்றுமுதல் சுவாமிகளுக்குப் பிக்ஷை கொண்டுவந்து படைத்துச் சுவாமிகள் புசித்தபின் எஞ்சிய பரிகலச் சேடத்தை மனைவியுந் தானுமுட்கொண்டு வந்தனர். இவ்வாறு நடந்து வருகிற ஒன்பதாநாள் சுவாமிகள் கிரகப் பிரவேசமாய்விட்டது இனிமேற் பிக்ஷை கொண்டுவர வேண்டாமென்று திருவாய் மலர்ந்தருளி அன்றிரவுதானே அவ்விடம் விட்டு வெளிப்பட்டுவிட்டது. சுவாமிகள் திருவாய் மலர்ந்த வண்ணமே அன்றுமுதல் முதலியார் மனைவி கருப்பவதியாகிப் பத்தாந் திங்களில் புத்திரனைப் பெற்று மாதா பிதாக்களிருவரும் களிப்புற்றிருந்தனர்.

இங்ஙன மிவர்கட்கு மகப்பேறளித்தருளிய பின்னர் நீலப் பாடியி னின்றும் வெளிப்பட்ட ஸ்வாமிகள் சிதம்பரம், விருத்தசைலம், அண்ணாமலை, வேங்கட முதலிய ஸ்தலங்களிற் சிற்சில அற்புதங்கள் தோன்றச் சஞ்சரித்துக்கொண்டு திருவொற்றியூர் கடற்கரையினும், பட்டினத்தடிகள் சமாதியின் பக்கங்களிலும் வசித்துக் கொண்டிருக்கும்போது அவ்வூரில் ஓர் பார்ப்பனப்பெண் துட்டதேவதைகளாற் பீடிக்கப்பட்டமையானும், பித்ததோடத்தானும் உண்டாகிய சித்தப் பிரம்மையால் உடை நழுவுதலாதிகள் தெரியாமல் தெருவிற் புறப்பட்டு ஓடுதல், முற்படுவோர்களை வைதல் அடித்தல், கட்டிப் பிடித்தல் தகாத காரியங்களைச் செய்தல் முதலிய குற்றங்களைக் குடும்பத்தார்கள் பார்த்துவீட்டிலடைத்து வைக்கினும் அடங்காமல் வெளியிலோடுதலுமாக விருப்பதைப் பிதாவாகிய அந்தணன் பார்த்துப் பல வைத்தியர் மாந்திரீகர்களைக் கொண்டு பார்க்கச் செய்ய, பார்ப்பவர்களுக்கு உடனே சுரமுந் தலைநோயு முண்டாவதன்றித் தலையில் சாம்பற் குப்பை விழுதலுமாக விருப்பதைக் கண்டு யாவரும் பார்க்கப் பயமடைந்து வராம லிருந்ததைப் பற்றிப் பிதா மிக்க வருத்தமுடையவராய் ஒற்றியூர்ச் சிவபெருமான் சந்நிதிக்குச் சென்று நமஸ்கரித் தெழுந்து துதிசெய்து அன்பர்க்கெளிய அப்பனே! என் புத்திரியைப் பற்றிய நோய்பேயாதிகளை மூன்று நாளைக்குள் நீக்கி யருளல் வேண்டும்; அங்ஙனம் அருளாதொழியில் என் புத்திரியை விட மூட்டி இறக்கச் சேய்வேன் அங்ஙனம் செய்யில் அவள் பேயாதிகளாற் படுந்துன்பங்களும் அவள் மூலமாக

எனக் குண்டாகிய துன்பங்களும் நீங்கிவிடும். அக்கொலையால் வரும் பாபத்தை யுனக்கே அர்ப்பணஞ் செய்வேன்; இது சத்திய மென்று சந்நிதியில் விண்ணப்பித்துவிட்டு வீட்டுக்குவந்து இரவிற் றுயிலும்போது சொற்பனத்தில் ஒற்றியூர்ச் சிவ பெருமான் ஓர் தவத்தார்போற் றோன்றி அப்பா! ஓர் ஞானசித்தனாகிய சீவன் முத்தன் அவதூதனாய்க் கடற்கரையிற் சஞ்சரித்துக்கொண் டிருக்கிறான். அவன் நாளைக் காலையில் பட்டினத்தார் சமாதியின் பக்கத்தில் நிட்டை செய்து கொண்டிருப்பான்; அவனது கண்ணோக்கம் படும்படி உனது பெண்ணைக் கட்டித் தூக்கிக்கொண்டு போய் வைப்பாயாகில் அவன் நிட்டை கலைந்து வெளிவந்து உன் புதல்வியை நோக்குவான். உடனே அவளைப் பிடித்த பேய் நோய்க ளனைத்தும் நீங்குவதோடு சென்ம நோயும் நீங்கிவிடு மென்று சொல்லி மறைந்தனர். இவ்வாச்சரிய கனவைக் கண்ட பிராமணர் காலையிலெழுந்து இது ஒற்றியூர்ச் சிவனருளே யென்று துணிந்து தன் ஞாதியர் சிலரைக்கொண்டு தன் புதல்வியைக் கட்டுவித்து வண்டியிலேற்றிச் சென்று பட்டினத்தடிகள் சமாதியின் பக்கத்தில் தனக்குக் கனவிலருளிச் செய்தபடி நிட்டையிலிருக்கும் அவ தூதராகிய சுவாமிகள் திருநோக்கம் படும்படியாக நேரிலிருக்கச்செய்து அசையாமல் பிடித்துக் கொண்டிருந்தனர். சற்றுப் போதிற்குப் பின் நிட்டையிலிருந்து சுவாமிகள் கண்ணைத் திறந்து எதிரிலிருக்கும் பெண்ணைப் பார்க்கவும், அப் பெண்ணைப் பிடித்திருந்த பேய்நோய்களனைத்தும் நீங்கின. நீங்கலும் முன்னுள்ள நாணம், மடம், அச்சம், பயிர்ப் பென்னும் மடந்தையர்க்குரிய உத்தம குணங்களும் சித்த பரிபாகமு மவட்குத் தோன்றின. தோன்றவும் தம்மைப் பிடித்திருந்தவர்களை கையை விடும்படி சொல்லி எழுந்து வஸ்திரத்தைச் செவ்வையாகக் கட்டிக் கூந்தலை முடித்துக்கொண்டு சுவாமிகளைப் பலமுறை வலம் வந்து நமஸ்கரித்தெழுந்து சுவாமிகளெதிரில் பயபக்தி விசுவாசத்தோடு நின்று எங்கள் குல தெய்வமே! தேவரீர் வீட்சண்ணியத்தால் அடியேனைப் பிடித்திருந்த துட்டதேவை யாதிகள் சூரியனைக் கண்ட இருள்போற் நீங்கிவிட்டன; இவ்வாறே அடியேனது பவ நோயையும் நீங்கும்படி அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்குச் சுவாமிகள் "அறியப்படுவனவாகிய ஜகஜீவபர கற்பனைகளை விடுத்துத் தனித்து அறியுமறிவாகவே

இருக்கில் பவ நோய் நீங்கு" மென வநுக்கிரகித்து அவ்விடம் விட்டு வெளிப்பட்டது.

இங்ஙனம் அநுக்கிரகம் பெற்ற பார்ப்பனப் பெண் வீட்டுக்கு வந்து பிதாவை நோக்கி என் குருநாதன் உத்திரவுப்படி யான் ஒருவாரந் தனித்திருக்கவேண்டும். அதுவரையில் எனக்கன்ன காரம் வேண்டுவதில்லை; என்பா லொருவரும் வரக்கூடாது; எட்டா நாள் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி ஓர் அறையிற் புகுந்து மனதை யொரு நிலைப்படுத்தி சுவாமிகள நுக்கிரகித்த படி நிட்டையிலிருந்து எட்டாநாள் விதேக முத்தியை யடைந்தனள்.

இப் பார்ப்பனப் பெண்ணுக்கு ஞாநாநுக்கிரகமுஞ் செய்து விட்டு வெளிப்பட்ட சுவாமிகள் சென்னை, மயிலாப்பூர், திருக்கழுக்குன்றம், சிதம்பரம் முதலிய ஸ்தலங்களிற் சஞ்சரித்துக் கொண்டு காரைக்காலுக்கு வந்திருக்கும் பொழுது அங்குள்ள ஓர் மஸ்தான்சாகிப்பாகிய பெரியவர் வந்து சுவாமிகளைப் பார்த்து அப்பா நீயும் நானும் எப்படி யிருந்தால் எங்கும் நிறைந்த பொருளாக விருக்கலா மென்று வினவ, அதற்குச் சுவாமிகள் நீ, நான், அது, இது என்னும் சுட்டிறந்து நின்றால் எங்கும் நிறைந்த பொருளாயிருக்கலாமென விடை பகர்ந்துவிட்டு அப்பதியை நீங்கிற்று.

இங்ஙனம் நீங்கி நாகப்பட்டனம் மேலைக்கோட்டை வாசலை அடுத்துள்ள நிபந்தக்காரர் சாவடியில் சிலநாள் வசித்திருந்தது. இங்ஙனம் வசிக்கும்போது ஓரன்பர் தினந்தோறும் பலகாரங் கொணர்ந்து கொடுத்துபசரித்து வந்தார். அவர் ஓர் நாள் தன் மகனைச் சுவாமிகளுக்குப் பலகாரங்கொடுத்துவா வென்று அனுப்பினார். அப்படியே கொண்டுவரும்போது இடையே பக்கத்திலுள்ள வேலியிலிருந்து ஓர் சர்ப்பம் வெளிப்பட்டு படமெடுத்துக் கொண்டு துரத்தித் தீண்டச் சிறுவன் பயந்து கரத்திலிருந்த பலகாரத்தைக் கீழே போட்டுவிட்டுச் சுவாமி என்னை சர்ப்பங் கடிக்கின்றது! என்றலறிக்கொண்டு கீழே விழுந்தான். அத்தருணத்தில் ஒரே துவுமின்றிச் சுவாமிகள், நகுலா! நாகன் பால் சிறுவனகப்பட்டுக் கொண்டான், விரைவிற் செல்லென்று சொல்லிவிட்டு மௌனமாயிருந்தது. பக்கத்திலிருந்தவர்கள் சுவாமிகள் திருவாக்கின் கருத் தறியாதவர்களா யிருந்தனர்.

உடனே கீரி புறப்பட்டுச் சென்று அச்சர்ப்பத்தை இரண்டு துண்டாக கடித்துவிட்டுப் போயிற்று. பின் மகனைச் சர்ப்பந் தீண்டியதெனக் கேள்வியுற்றுப் பிதா ஓடி வந்து மூர்ச்சித்துக் கிடக்கும் புத்திரனைத் தூக்கிச் சுவாமிகளிடங் கொண்டுவந்து எதிரில் கிடத்தி சுவாமிகளுக்குப் பலகாரங் கொண்டுவந்த என் புத்திரன் சர்ப்பந்தீண்டி இறந்தான்; சர்ப்பமும் கீரியால் துண்டிக் கப்பட்டிறந்ததென்று கூறவும், சுவாமிகள் தன் கரத்தால் மைந்தன் சிரத்தைப் பரிசித்தது; உடனே விடமயக்கம் நீங்கிப் புதல்வனெழுந்து சுவாமிகளை நமஸ்கரித்தனன். அப்போது பக்கத்திலிருந்தவர்கள் சுவாமிகள் பிள்ளையைத் தீண்டிய சர்ப்பத்தையடக்க நகுலனை யேவியதையும், சர்ப்பந் தீண்டப்பெற்று விடமேறி மூர்ச்சித்த பிள்ளையை எழுப்பியதையுங் கண்ணுற்று அடங்கா மகிழ்ச்சியுடையவராய் எங்கும் பிரஸ்தாபிக்க, அதனால் சுவாமிகளைப் பார்க்கப் பல ஜனங்கள் வந்து கூடத்தலைப்பட்டன. உடனே சுவாமிகள் அவ்விடத்தைவிட்டு வெளிப்பட்டுப் பல தலங்களிற் சஞ்சரித்துக்கொண்டு திருவாரூரில் வன்மீகபுரத்திலிருக்கிற சோமநாத சுவாமி கோவிலிலும், ஓடம்போக்கி யாற்றின் கரைப் படுகைகளிலுள்ள காட்டிலும், விருக்ஷத் தடிகளிலும் வசித்துக்கொண்டிருந்தது.

சில சமயம் கண் முகிழ்த்து நிட்டை செய்துகொண்டிருக்கினு மிருக்கும். சில சமயம் சவாசநத்திருக்கினு மிருக்கும். சில சமயம் உபசாந்த நிலைமை யாவர்க்குந் தோன்ற முகமலர்ச்சியோடசைவற் றிருக்கினு மிருக்கும். தமக்குப் பசிநோயதிகரிக்கில் வீதிகளிற் சென்று வெளியிற் கிடக்கும் பரிகலங்களிலுள்ள அன்ன முதலியவைகளை எடுத்துப் புசித்துவிட்டுப் பின்னரும், முற்கூறிய விடங்களிற் சஞ்சரித்துகொண் டிருக்கினு மிருக்கும். இச் சுவாமிகளைப் பார்த்த ஊரிலுள்ளவர்களிற் சிலர் பயித்தியக்காரனென்றும், சிலர் பேயனென்றும், சிலர் பற்றறத்துறந்த மகா ஞானியென்றும் சொல்லிக் கொள்வார்கள். இங்ஙனம் வசிக்குங் காலத்தில் சித்தூர் ஜில்லாவிலுள்ள சோமநாத முதலியாரென்னும் ஓர் பிரபுவானவர் குன்ம வியாதியாற்றுன்புற்றவராய்ப் பல ஔடதங்களாலும் அந்நோய் நிவிர்த்தியாகாமல் சிதம்பரம் நடேசர் சந்நிதானத்தை யடைந்தால் நீங்குமென் றெண்ணி அத்திருப்பதியை யடைந்து முறைப்படி சிவகங்கையில் ஸ்நாநஞ் செய்து

விநாயகரையும்,சபாநாயகரையும்,சிவகாமியம்மையையுந் தரிசித்து அர்ச்சனை முதலிய வழிபாடுகளையுஞ் செய்துகொண்டு விரத சீலராய் இரண்டு திங்களிருந்தும் குன்மம் நீங்காமையால் அதனால் வரும் உபாதிக்கு ஆற்றாதவராய் இனிப் பிராணத்தியாகஞ் செய்து விடுவதே உத்தம மென்றெண்ணி கூர்மையுள்ள ஓர் சூரியை வாங்கி நன்றாய்த் தீட்டி மடியில் வைத்துக்கொண்டு இரவில் அர்த்த சாமமாய்த் திருக்காப்பிட்டு அர்ச்சகர் முதலிய அனை வரும் வெளியிற் போகும் வரையில் மறைவாக விருந்துபின் நடேசர் சந்நிதிக்கு முன்வந்து நின்று சர்வ ஆன்மாக்களுக்கும் இன்ப மளிக்கும் நிமித்தம் ஆநந்த நிர்த்தனஞ் செய்தருளு மையனே! இந்நோயால் நேர்ந்துள்ள துன்பத்தை என்னால் சகிக்கக்கூட வில்லை. அதனால் பிராணத்தியாகஞ் செய்து கொள்ளு கிறேன் அடியேனைத் திருவடியிற் சேர்த்துக் கொண்டருளு மென்று பிரார்த்தித்துக் கொண்டு மடியிலிருந்த சூரியை எடுத் துத் தன் கழுத்தில் வைத்து அறுக்கத் தொடங்கினபோது நடேசர் கிருபை கூர்ந்து அசரீரியாக "உனக்குற்ற குன்மம் இப் போது இங்கே நிவிர்த்தியாகாது; திருவாரூரிலிருக்கும் தக்ஷிணா மூர்த்தியிடம் செல்லுவாயானால் அந்த க்ஷணமே நிவர்த்தியாகு" மென்று கூறக்கேட்ட சோமநாத முதலியார் இவ்வார்த்தை யாருடையது? இங்கு யாரேனும் மறைந்திருக்கிறார்களா? வெனத் தூண்மறைவு முதலிய விடங்களிற் றேடிப்பார்த்து ஒருவருங் காணாமையால் நடேசர் கூற்றே எனத்துணிந்து விடியற்காலையில் ஒருவருக்குந் தெரியாது வெளியே வந்து ஆரூரை நோக்கிப் புறப் பட்டு அத்தலத்தை யடைந்து கோவிலின் கண்ணுள்ள தக்ஷிணா மூர்த்திக்கு அபிடேக வாராதனை முதலிய சிறப்புக்களனைத்தையுஞ் செய்து அப்பெருமான் சந்நிதியில் அர்த்தசாமம்வரை இருந்தும் நோய் சிறிதும் நீங்காமையால் நடேசருடைய அசரீரிவாக்குப் பிறந்தும் நமது துன்பம் நீங்கவில்லையே! என்று வியாகூல சித்த ராய் இரவில் நித்திரை செய்யும்போது அவர் கனவில் நடேசர் ஓர் துறவியாக வந்து நாம் சொல்லிய தக்ஷிணாமூர்த்தி இஃதல்ல; இவ்வூரில் நிர்வாணியாகத் திரிகின்றான்; அவனிடஞ் செல்வா யென்றுகூறி மறைந்தனர். சோமநாத முதலியார் காலையிலெழுந்து திருவாரூரில் பலபேரிடத்திலும் விசாரித்துத் தேடிப் பார்த்துக் கொண்டு கமலாலயத்தின் மேல் கரையில் வந்து விசாரிக்கும்

போது அங்குள்ளவர்கள் இந்தக் காட்டில் அவதூதரா யொருவ ரிருக்கின்றார்; சிலபோது இப்பிராமணத் தெருவில் கிடக்கும் பரிகலங்களிலுள்ள அன்னம் முதலியவைகளை ஞமலிகளோடு தானும் புசித்துக்கொண்டு போவர்; நீ தேடிப் பாரென்று கூற, அப்படியே தேடிக்கொண்டு வரும்போது ஓர் வீட்டு வாயிலிற் கிடக்கும் பரிகலத்திலுள்ள ஓதநத்தை ஞமலிகளோடு புசித்துக் கொண்டிருந்தது. அதை முதலியார் பார்த்து இம்மகா புருடன் றான் தக்ஷிணாமூர்த்தி யென்றறிந்து மிக்க பயபக்தி விசுவாசத் தோடு நெருங்கிச் சென்று நமஸ்கரித் தெழுதலும், சுவாமிகள் பார்த்துத் தன் கையிலெடுத்த அமுதை முதலியார் வாயிலிட்டு உன்னை நடேச னநுப்பினனோ வென்றுகூறி யருளியது.

சுவாமிகள் தன்வாயிலிட்ட அன்னத்தை முதலியார் உட்கொள் ளவும் நீண்டகாலமாய்த் தனக்கிருந்த குன்மநோய் நீங்கிவிட்டது. இந்நோய் தோன்றிய நாடொடங்கி வெந்நீர் அன்னமன்றிப் புசித் தறியாத அம்முதலியார் அற்றை நாள் நெய் பருப்பு முதலிய சட் வித இரச பதார்த்தங்களுஞ் சேர்த்து உணவருந்தினர். அருந்தப் பட்டஅவ்வுணவானது சீக்கிரத்தி லுபாதி செய்யாமற் சீரணமாய் விட்டது. இவ்வாறு நோய் நீங்கப்பெற்ற முதலியார் மிக்க வாநந்த முடையராய் அன்பினோடும் சுவாமிகட்கு அபிடேகாதிகளைச் செய்து பால், பழம், அன்ன முதலியவைகளைப் புசிக்கச் செய்து சேடமா யுள்ளவைகளைத் தானும் புசித்துப் பலருக்குங் கொடுத்து யாவர்க்குந் தெரியும்படி தனக்கு நீண்ட நாளாகக் குன்மநோ யிருந்ததும் அதை நீங்குதற் பொருட்டு சிதம்பரம் சபாநாய கரிடத்தில் அன்பு செய்திருந்ததும், அந்நோய் நீங்காமையால் தற் கொலைக்குத் துணிந்ததும், நடேசர் அசரீரியாகத் திருவாரூர் தக்ஷிணாமூர்த்தியைத் தரிசித்தால் தீருமென் றருளியதும், உடனே திருவாரூர் கோவிலிலிருக்கும் தக்ஷிணாமூர்த்தி சந்நிதாநத்துக்கு வந்ததும், அசரீரி வாக்குப்படி நோய் நீங்காமையால் வியாகூல முற்றதும், அன்றிரவு சொப்பனத்தில் நடேசர் தறவினர்போற் றோன்றி யாமுரைத்த தக்ஷிணாமூர்த்தி இஃதல்ல இவ்வூரில் அவ தூதனாக ஒருவனிருக்கின்றான் அவனிடத்திற் செல்லென்று கட்டளையிட்டு மறைந்ததும், மறு நாட் காலையிலெழுந்து சுவாமி களைத் தேடிக் கண்டதும், கண்டவுடனே சுவாமிகள் பரிகலச் சேடத்தைத் தன் வாயிற்போட்டு நடேசனா உன்னை அநுப்பின

னென்று கேட்டதும், வாயிற் போட்ட அன்னம் உள்ளே யிறங்க யிறங்க வியாதியும் கீழே யிறங்கியதையும், அன்னம் வயிற்றைச் சேர நோய் வயிற்றைவிட்டு நீங்கியதையும் ஒளியாது வெளியாகச் சொல்லினர். அன்று முதல் தக்ஷிணாமூர்த்தி யென்ற நாமம் ஆரூர் முற்றிலும் பரவி யாவர்களும் அந்நாமத்தையே சொல்லித் தோத்திரஞ் செய்தனர். பிறவூர்களி லுள்ளவர்களும் அங்ஙனமே அன்பு பாராட்டித் தோத்திரஞ் செய்து வந்தனர்.

சுவாமிகள்சிலபோது சோமநாத சுவாமிகள் கோவிலிலும்,சில போது ஓடம்போக்கி யாற்றங் கரைகளைச் சார்ந்துள்ள படுகைகளி லிராநின்ற விருக்ஷத்தடிகளிலும், சிலபோது கமலாலயக் கரைகளி லும், சிலபோது நேர்ப்பட்ட வீடுகளிலுள்ள படுக்கைகளிலும் நியமமின்றி யிருக்கும்; சிற்சில விடங்களில் நிட்டை செய்து கொண்டிருக்கினுமிருக்கும். அப்போது வெய்யிற் றிருமேனியிற் படுமாயின் சர்ப்பங்கள் படத்தை விரித்து வெயிற்படாமல் மறைத்து ஆடிக்கொண்டிருக்கும். ஓர் நாள் திருவாரூரில் பண்டிதப் பிராஹ்மணராகிய தாசில்தார் வீட்டில் அவர் படுக்கையிற் சென்று சுவாமிகள் படுத்தது. அதைப்பார்த்த அவர் மனைவி தாசில்தாருக்குத் தங்கள் படுக்கையில் ஒரு கிருக்கன் படுத்திருக்கிறானென்று தெரிவிக்க, உடனே அவர் வேகமாக வந்து பார்த்து தன் சேவகராகிய கேசவ நாய்க்கரை நோக்கி இக் கிருக்கனை பிரம்பாலடி யென்று சொல்லவும், கேசவ நாய்க்கர் அவர் கிருக்கரல்லர்; பிரஹ்மஞ்ஞானி அவரை யடிப்பவர்களுக்கு அளவில் காலம் நரகவேதனைகள் நீங்காவாதலின் அடிக்கக் கூடாதென்று கூறவும், தாசில்தார் உன்னை வேலையினின்றும் நீக்குவேனென்றார். அதைக் கேட்ட நாய்க்கர் இன்று முதல் யான் தக்ஷிணாமூர்த்தி சேவகனேயன்றி உன் சேவகனல்லனென்றுரைத்து வில்லையைக் கழற்றி வைத்து விட்டு வெளியிற் செல்லவும், தாசில்தார் கோபங்கொண்டு தான் ஓர் பிரம்பினால் சுவாமிகள் திருமேனியில் ஓரடி யடித்தனர். உடனே சுவாமிகளெழுந்து துடைத்துக் கொண்டு "துடைபடும், துடைபடு" மென்று இரண்டு தரஞ் சொல்லிவிட்டு வெளியிற் சென்று விட்டது. அன்று முதல் எட்டு நாளைக்குள் அவன் உத்தியோகமும் போய், மனைவியுமிறந்து, தானும் நோய் முதலியவற்றால் பீடிக்கப்பட்டவனாயினான். கேசவ நாயகர் அற்றை நாள் முதல் சேவகத்தை நீக்கி தக்ஷிணாமூர்த்திக்கே சேவகனாகிச்

சுவாமிகள் தெருவாதிகளில் நடந்து செல்லும்போது சுவாமிகள் விஷயச் சுட்டுத லின்மையால் ஓரோரிடங்களில் தெருவி லிருக் கும் வேலிகளிலும் பக்கங்களிலுள்ள கள்ளி முட்களிலும் பள்ளங் களிலும் வீழ்ந்து பின் திரும்பும். அங்ஙனம் வீழாதிருக்கும்படி பின்றொடர்ந்து சென்று வேலி, கள்ளி, பள்ளம் எதிர்ப்படுமாயின் முன் சென்று கைநீட்டித் தடுத்துத் திரும்பும்படி செய்து கொண்டு சுவாமிகள் பின் செல்லுபவரா யிருந்தார்.

பின் ஓர் நாள் வன்மீகபுரம் பூசைத்துறையிலுள்ள ஓர் மரத் தடியிற் சுவாமி படுத்திருக்கும்போது மடத்தெருவிலிருக்கும் ஓர் பிராமண ஸ்திரீ வந்து ஸ்நானஞ் செய்து புடவை யணிந்து கொண்டிருக்கும்போது சுவாமிகள் கண்ணைத் திறந்து பார்க்கப் பிராமண ஸ்திரீயின் மார்பில் பால் பூரித்திருந்த தனம் காணப் பட்டது. அதைச் சிலந்திக்கட்டியென நினைத்து மிகவும் வருத் தத்தைக் கொடுக்குமே என்றிரங்கி இரண்டு தரம் வாயினால் இச் சுக் கொட்டிவிட்டு கண்ணை மூடிக்கொண்டது, பிராமண ஸ்திரீ புடவையை யணிந்து சலந் திரட்டிக்கொண்டு தன் கிரகத்துக்குச் செல்லவும், குழந்தை பாலுக்கு அழுதலைப் பார்த்து வீட்டிலுள்ள வர் குழந்தைக்குப் பாலைக் கொடென்று கூறுவதற்கு முன்னமே பால் வற்றி ஸ்தனங்கள் சுருங்கிப் புருடர் மார்புபோலாயினதைப் பிராமண ஸ்திரீ பார்த்து, மாமன் மாமிக்குத், தான் ஸ்நானக் கட்டத்துக்குச் சென்றதும், அங்கு நடந்ததும், இங்கு வரும் போது தனங்கள் சுருங்கிவிட்டதும் தெரிவிக்க, அவர்கள் ஸ்நா நக் கட்டத்தில் பார்த்தவர் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளா யிருக்க வேண்டும்; நீ குழந்தையை எடுத்துக்கொண்டு வருவாய்; குழந் தையைச் சுவாமிகள் திருவடிகளில் வைத்துக் குழந்தைக்குப் பாலுண்டாகும்படி செய்யவேண்டுமென்று பிரார்த்திப்போ மெனப் புகன்றுகொண்டு குழந்தையைக் கொண்டுவந்து சுவாமி கள் திருவடியில் வைத்துக் குழந்தை பாலின்றி வருந்துகிறது, பால் சுரக்கும்படி கிருபை செய்யவேண்டு மென்றனர். சுவாமிகள் கண் திறந்து குழந்தையையும் முன்பாக நிற்கும் தாய் முதலியவர் களையும் பாரத்து மிருதுவாக அமுதிருக்கு மிடமா! அமுதிருக்கு மிடமா! பெருகும்! பெருகும்! செல்வீரென்று அருளிச்செய்து பின் கண்களை முகிழ்த்துக்கொண்டது. பின் தாய் குழந்தையைக் கையிலெடுக்கவும் தனம் வளர்ந்து பாலும் பெருகியது. அப்பாலைக்

குழந்தைக்குக் கொடுத்து யாவரும் துன்பம் நீங்கித் தக்ஷிணா மூர்த்தியைத் தொழுது துதித்துக் கொண்டாடிக் கொண்டு கிரகஞ் சேர்ந்தார்கள்.

பின்னர் சிக்கற்றலத்தி லிருந்த பழநியப்ப செட்டியா ரென்பவர் குடும்பக் குற்றங் கண்டு துறவராய் இனி நாம் நற்கதியடையச் செய்யுங் காரியம் யாதெனச் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, தெருவிற் சென்றுகொண்டிருந்த இருவரில் ஒருவர், மற்றொருவரைப் பார்த்து, நாம் திருவாரூருக்குச் சென்று தக்ஷிணா மூர்த்தி சுவாமிகளுக்குத் திருத்தொண்டு புரியில் சீக்கிரத்தில் நற்கதியை யடையலாமென்றார். அச் சொல்லை செவியேற்ற பழநியப்ப செட்டியார் இந்த வாக்கியம் நமக்காகவே பிறந்ததென்று துணிந்து உடனே துறவராய்த் திருவாரூரை யடைந்து தக்ஷிணா மூர்த்தி சுவாமிகளுக்கு ஆத்தமாதிய பணிவிடைகளைச் செய்து தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் கிருபா நோக்கத்தால் ஞானாநுபூதியுற்றுத் திகம்பரராயிருந்தார். அப்போது மடப்புரம் கவரையர் தெருவிலுள்ள கவரையர்களில் கேசவ நாயக்கர், சேர்வை நாராயணசாமி நாயக்கர், பாப்பண செட்டியார், சென்னப் நாயக்கர், வீரா நாயக்கர், கண்ணப் நாயக்கர், வீரசைவ நஞ்சையர் மடத்து வெற்றி வேலையர், வைத்திலிங்கம் பிள்ளை, சிதம்பரம் பிள்ளை, அப்பு முதலியார், முத்துச் சேண்டப் புரையர், கள்ளர் தெருவு கணபதி வாண்டையார், பாப்புக் கண்டியர், மாரிமுத்து நாயக்கர், நாராயணசாமி சேண்டப்புரையர் முதலிய பலபேர்கள் பழநியப்ப சுவாமிகளிடத்தில் நாங்கள் திரவியந் தருகிறோம்; தாங்கள் தக்ஷிணா மூர்த்தி சுவாமிகளுக்குச் சமாதியாலயம் முன்னமே கட்டுவிக்க வேண்டுமென்றார். அதற்குப் பழநியப்ப சுவாமிகள், சுவாமிகளின் திருவுளக் குறிப்பை யறிந்து ஆலயஞ் செய்விக்க வேண்டுமென்றார். அப்படியே செய்யலாமென யாவரும் ஒன்று கூடிச் சோமநாத சுவாமி கோவிலில் உப சாந்த நிலைமையிலிருந்த சுவாமிகள் முன் சென்று நமஸ்கரித் தெழுந்து வணக்கத்தோடு நின்றார்கள். அப்போது சுவாமிகளெழுந்து ஆற்றங்கரையிலேறி தெற்கே நோக்கிச் செல்லப் பழநியப்ப சுவாமிகள் முதலியோரும் பின்றொடர்ந்து சென்றார்கள். அப்போது சுவாமிகள் கரையின் கீழிறங்கி ஓரிடத்தில் சற்று நின்று பின் தெற்கே சென்று விட்டது. பின்றொடர்ந்து வந்தவர்களில் ஒருவர் சுவாமிகள் நின்ற விடமே குறிப்பிட்ட

விடமா யிருக்கலாமென் றெண்ணி அவ் விடத்திலுள்ள மணலைக் கையாற் குவித்தார். அதில் ஓர் பொற்பண மிருக்க யாவரும் பார்த்து இதுவே சுவாமிகள் திருவுள்ளத்திற் பட்ட விடமெனத் துணிந்து நாட் பார்த்து ஆலய முகூர்த்தம் செய்தார்கள்.

இது விஷயந் தெரிந்த திருவாரூர் பாவா முதலியார் முதலிய தநவான்களும், திருவாரூரிலும் பக்கத்துக் கிராமங்களிலு முள்ள பக்தர்களாகிய மிராசுதார்களும், ஏழைக் குடிகளும் அவ்வவர்கள் சத்தியாநுசாரமாக பிரியத்தோடு கொண்டுவந்து கொடுக்கும் திரவியம், செங்கல், கருங்கல், சுண்ணாம்புகளையும் தரிசனைக்கு வருபவர்கள் பாத காணிக்கையாக வைக்கும் திரவியங்களையுங் கொண்டு பழநியப்ப சுவாமிகள் கருப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், பிரகாரம், பத்திமண்டபம், கோபுரம், முன் மண்டபம், சவுக்கண்டி, விமானமண்டபம், படித்துறையாதிகளையும் சுவாமிகள் ஐக்கியமானபோது கருப்பக்கிரகத்துள் சமாதி வைப்பதற்குச் சுரங்க மார்க்கத்தையும் செய்வித்து கருப்பக்கிரகத்தில் தஞ்சாவூர்சரபோஜி மகாராஜா காசியிலிருந்து கொணர்ந்து கொடுத்த பாணலிங்கத்தை ஸ்தாபித்து கும்பாபிஷேகம் செய்து அன்று முதல் நித்திய நைமித்தியாதி பூசைகள் நடத்திவரப் பட்டது. இங்ஙனம் நடத்தி வரும் காலத்தில், வடபாதிமங்கலம் முதலியார், சுவாமிக்கு ஆலயங் கட்டி முடிந்து விட்டது; இனி பூசையாதிகளுக்குப் பூஸ்திதி ஏற்படுத்த வேண்டுமென்று கருதி சுவாமிகள் பேரால் முத்திரியோலையில் பத்துவேலி நிலத்தைத் தாநசாசநமாய் எழுதிக்கொண்டு வந்து சுவாமிகள் பாதத்தில் காணிக்கையாக வைத்து நமஸ்கரித்தெழுந்து பேரன்போடு வணக்கமாய் நின்று சுவாமின்! அடியேன் பத்துவேலி நன்செய் நிலத்தைச் சுவாமிகளுக்கு தாந சாசநம் பண்ணி யிருக்கிறேன்; அதனைச் சுவாமிகள் கிருபை கூர்ந்து அங்கிகரித்துக் கொள்ள வேண்டும் என விண்ணப்பித்தனர். சுவாமிகள் திருக்கரத்தால் முத்திரியோலையை எடுத்து முதலியாரைப் பார்த்து, அப்பா நீ நமக்குக் கொடுத்தாய், நாம் உனக்குக் கொடுக்கின்றோம், நீ கெட்டியாய் வைத்துக்கொள்; குறைவு வராது என்று சொல்லிக் கொடுத்தது, கொடுக்கும் போது முதலியார் பெற்றுக் கொள்ளச் சற்று யோசித்தார். அங்ஙனம் யோசிப்பதைச் சுவாமிகளைச் சூழ்ந்து நின்ற பெரியோர்கள் அறிந்து, ஐயா, சுவாமிகள்

திருக்கரத்தால் கொடுப்பது குறைவுபடாத செல்வமாகவிருக்கும் தாமதியாமல் பெற்றுக்கொள்ளு மென்றார்கள். உடனே வணக்கத்தோடு பெற்றுக்கொண்டார்.

பின்னரொரு நாள் தியாகராஜப் பெருமான் இரத உற்சவ தரிசனத்திற்குத் தஞ்சை சரபோஜி அரசன் வந்தபோது உடன் வந்த சர்க்கிலைப் பார்த்து நாம் மாலைப்போது தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் தரிசனத்திற்குப் போதல் வேண்டும். நம்மால் தானஞ் செய்யக்கூடியதாகச் சமீபத்திலிருக்கிற கிராமங்களில் ஒன்றை தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளுக்குத் தானஞ் செய்யவேண்டும் என விரும்புகிறேன். ஆகையால் நம்மைக் கேட்டுக்கொள்ளும்படி சுவாமிகள் சிஷர்களுக்குத் தெரிவிப்பதோடு தானஞ் செய்யத் தக்க கிராமத்தையுந் தெரிவித்து வைப்பாயென் றுத்தரவு செய்தார். உடனே சர்க்கில் தக்க கிராமங்களை யெழுதி வைத்துக்கொண்டு தாசில்தாரை அழைத்து தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் தரிசனத்திற்கு மாலையில் மகாராஜா வருகிறார்கள்; அப்போது மகாராஜா அவர்களிடத்தில் அங்குள்ளவர்களை இதிலெழுதப்பட்டுள்ள கிராமங்களில் ஒன்றைக் கேட்டுக்கொள்ளும்படி செய்யுமென்று தானெழுதி வைத்திருந்த ஜாப்தாவைக் கொடுத்தார். உடனே தாசில்தார் வாங்கிக் கொண்டு பழநியப்ப சுவாமியாகிய திருப்பணிச் சுவாமியைக் கண்டு சர்க்கில் தந்த ஜாப்தாவைக் கொடுத்து சர்க்கில் கூறியதையுந் தெரிவித்தார்; திருப்பணிச் சுவாமிகள் அப்படியே ஆகட்டுமென்று ஜாப்தாவை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு வந்து கோவில் குடவரை வாயிலில் கால் வைக்கவும், உள்ளே மகா மண்டபத்தில் கட்டிலிற் படுத்திருந்த சுவாமிகள் "சகல உலகமும் நம்மிடத்தில் ஆகாயத்தில் நீலபீதாதிகள் போல ஏக தேசத் தோற்றமாயிருக்க ஒருவன் சிறிது நிலம் கொடுக்கின்றானும், அதை ஒருவன் பெற்றுக் கொள்கின்றானும், இவனன்றோ கானல் நீரை யுண்டுகளைதீரக் கருதினான்" னென்றது. அவ்வாக்கியங் கேட்ட திருப்பணிச் சுவாமிகள் பயந்து சுட்ட சட்டியைக் கைவிடுவது போல கையிலிருந்த ஜாப்தாவை எறிந்துவிட்டுச் சும்மா விருந்தது. பின்னர் மகாராஜா மாலையில் தமது தளங்களோடு தக்ஷிணாமூர்த்தி தரிசனத்திற்கு வந்து சுவாமிகள் சந்நிதியில் தம்முடன் எடுப்பித்து வந்த பழவர்க்கம் பலகார வர்க்கங்களை வைத்துப் பிரதக்ஷணம் வந்து நமஸ்கரித்தெழுந்து சுவாமிகள் திரு

வடியில் தன்னால் செய்வித்த சொர்னப் பாதுகையைப் பூட்டித் தந்தத்தாலாகிய யோக தண்டையும் வைத்துப் பீதாம்பரங்களைத் திருமேனியிற் சாத்தி சில திரவியங்களைப் பாத காணிக்கையாக வைத்துப் பின்னும் நமஸ்கரித்து எழுந்து வணக்கத்தோடு விபூதி பிரசாதத்தை விரும்பி இரண்டு கைகளையும் நீட்டி விரித்துக் கொண்டு நின்றார். அப்போது சுவாமிகள் அரசனை நோக்கா திருப்பதைப் பக்கத்தில் நின்றுள்ள திருப்பணிச் சுவாமிகள் பார்த்து விபூதித் தட்டை சுவாமிகள் திருக்கரத்துக்கு அருகாக ஏந்திக்கொண்டு, சுவாமி! மகாராஜா அவர்களுக்கு விபூதி யளித் தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். பின் சுவாமிகள் விபூதியை எடுத்து எறியவும் அது மகாராஜாவின் கரத்தில் விழுந்தது. அதனை இராஜாவானவர் அன்போடு சிர முதலியவைகளிற் தரித்துக்கொண்டு தோத்திரஞ் செய்து நின்றார். பின்னர் நாம் சர்க்கிலுக்கு உத்திரவு செய்தபடி இங்கு ஒருவரும் நம்மைக் கேட்கவில்லையே என்றெண்ணி சுவாமிகளை நோக்கி நம்மாலிந்த விடத்துக்குச் செய்யத்தக்கது யாதென்றார். அதற்குத் திருப்பணிச் சுவாமிகள் மகாராஜா அவர்கள் இந்தச் சந்நிதானத்தில் சிரத்தை வைக்க வேண்டிய தொன்றைத் தவிர இவ்விடத்துக்கு யாதொரு குறைவுமில்லை என்றனர். உடனே அரசன் பெரிய மோராக்கள் நூற்றெட்டால் அர்ச்சனை செய்து சில மோராக்களைப் பாத காணிக்கையாக வைத்துப் பின்னும் நமஸ்கரித்துக்கொண்டு தன் யானையிற் போட்டு அடித்துக் கொண்டு வந்த நகராக்களி லொன்றை சுவாமிகள் பூசா காலத் தடித்தற்கு இருக்கட்டு மென்று இறக்கிச் சந்நிதானத்தில் வைத்துவிட்டுத் தன் பரிவாரங்களோடு மகாராஜா இருப்பிடஞ் சேர்ந்தார்.

பின்னர் நாகப்பட்டினம் வாணக்காரத் தெருவிலுள்ள சுப்ப பிள்ளை யென்பவர் சுவாமிகள் மகிமையைக் கேள்வி யுற்றுப் புத்திரப் பேற்றையுஞ் செல்வத்தையும் விரும்பினவராய் மனைவியோடு திருவாரூருக்கு வந்து சுவாமிகளைத் தரிசித்துப் பிட்சை செய்வித்துச் சுவாமிகளின் பரிகலச்சேடத்தை யுட் கொண்டனர். இவ்வாறு குருவாரந்தோறும் வந்துபிட்சை செய்வித்து பரிகலச் சேடத்தைப் புசித்துக் கொண்டு வருங் காலத்தில் புத்ரப் பேறும் உண்டாய்ச் செல்வமும் பெருகியது. அக்காரணத்தால் சுவாமிகளை மறவாத சித்தமுடையவரா யிருக்குங் காலத்தில் வியாபார நிமித்தம் சில திரவியங்களை எத்துக் கொண்டு முத்துப்பேட்டைக்கு இப் பால்ஒரு மைல் தூரத்திற் செல்லும்போது சூரியன் அஸ்தமனமாயினன். அப்போது சில திருடர்கள் வந்து வண்டியை மறித்துச் சுப்ப பிள்ளையைக் கீழே தள்ளி இம்சை செய்யும்போது அவர் பயந்து நடுங்கி ஆபத்சகாயனாகிய சுவாமியை நினைத்து, அப்பா

தக்ஷிணாமூர்த்தி! யான்யென் செய்வேன்! நீயே தஞ்சமென்று கூறி ஓலமிட்டார்! அச்சமயத்தில் முக்காத தூரத்திலுள்ள திருவாரூரில் மடாலயத்தினுள்ளே சயனித்திருந்த தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் எழுந்து கோவிலுக்கு வெளியில் வந்து, அடா வீரா! சுப்பன் திருடர் கையில் அகப்பட்டுக் கொண்டான்; சீக்கிரம்போடா வென்று இரண்டு தரஞ் சொல்லிவிட்டு முன்போற் சென்று சயனித்துக் கொண்டது. சுப்ப பிள்ளை ஓலமிடும்போது பக்கத்திற் பனைமரத்திற் கள்கட்டிக் கொண்டிருந்த சாணார்களைப் போலப் பன்னிரண்டு ஆட்கள் இதோ வந்து விட்டோமென்று சொல்லிக் கொண்டு ஓடிவந்து திருடர்களை மேல்விழுந்து அடிக்கவும் அத் திருடர்கள் உயிர் தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். பின்னர் சுப்ப பிள்ளையை வந்த பன்னிருவரும் பார்த்து நீர் அஞ்சவேண்டாம்; எங்கே செல்ல வேண்டிய தென்றார்கள். சுப்ப பிள்ளை முத்துப் பேட்டைக் கென்றார். ஆனால் நாங்களும் அவ் விடந்தான் வருகிறோம்; வாருமென் றழைத்துக் கொண்டு முத்துப்பேட்டை எல்லை வரையிற் சென்று, நாங்கள் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் ஏவலாளரென்று சொல்லி மறைந்து விட்டனர். அம்மொழியைக் கேட்ட சுப்ப பிள்ளை சுவாமிகளிடத்துப் பேரன்புடையராய் முத்துப் பேட்டைக்குப் போய்க் காரியங்களை முடித்துக் கொண்டு திருவாரூருக்குவந்து சுவாமிகள் சந்நிதாநத்தில் நமஸ்கரித்தெழுந்து முத்துப்பேட்டையின் சமீபத்தில் தனக்குத் திருடர்களால் நேர்ந்த அபாயத்தையும், அச்சமயத்தில் தான் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளை நினைத்து நீயே தஞ்சமென் றழுததையும், அப்போது பன்னிரண்டு சாணார்கள் ஓடி வந்து திருடர்களை அடித்துத் துரத்தி எனக்குத் தேறுதல் சொல்லி முத்துப்பேட்டை எல்லையிற் கொண்டுபோய் விட்டு நாங்கள் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் ஏவலாளர்க ளென்று சொல்லி மறைந்ததையும் யாவர்க்கும் வெளியாகக் கூறினர். அப்போது மடத்திலுள்ளவர்கள் நான்கு திநத்துக்கு முன் அஸ்தமந காலத்தில் கோவிலுட் சயனித்திருந்த சுவாமிகள் திடீரென வெளியிலெழுந்திருந்து வந்து, "அடே வீரா! சுப்பன் திருடன் கையி லகப்பட்டுக் கொண்டான்! சீக்கிரம் போடா!!" வென்று இரண்டு தரம் புகன்று முன்போலுள்ளே சென்று சயனித்துக்கொண்டது; அன்று சுவாமிகளருளிய குறிப்புரை இன்று வெளியாயிற் றென்றார்கள், இங்ஙனம் அணிமைத் தொண்டர்கூறக் கேட்ட சுப்பபிள்ளை சென்னியிற் கூப்பிய அஞ்சலியஸ்தராய் பயபக்தி விசுவாசத்தோடு நின்று ஆபத்துக் காலத்தில் இரட்சித் தருளிய கருணாநிதியே! அடியேனை முற்றும் இரட்சிக்க வேண்டும்; என் உடல் பொருளாவி மூன்றையும் நின்றிருவடிக்கே தத்தஞ் செய்தே னென்று விண்ணப்பித்து நமஸ்கரித்தெழுந்து

வடக்கு இரத வீதியில் சுவாமிகள் பேரால் ஒரு திருமடமமைத்துச் சுவாமிகள் திருவுருவத்தையும் அமைத்து வைத்தனர். இது இங்ஙனம் நிற்க,

பற்பல தேசங்களினின்றும் ஸ்ரீ தியாகேச பெருமான் இரதோற்சவ தெரிசனத்துக்கு அவ்வவர் சீடவர்க்கங்களோடு வழக்கம்போல் வந்து கொண்டிராநின்ற பிராமண சந்நியாசியர்களில் பரமாம்ஸர்களாகிய கிருஷ்ணாநந்தகிரி சுவாமிகள் முதலிய சிலர்கள் ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளது ஞானாநுபூதி நிலைமையையும், சாபாநுக்கிரக சாமர்த்தியத்தையும் பல பேர்களாற் கேள்வியுற்று இப்படிப் பட்ட மகானைத் தரிசிக்க வேண்டுமென்னும் பேரவா வுடையவர்களா யிருந்து சுவாமிகளை இருப்பிடந் தேடித் தரிசிக்கலா மென்றால் பொறாமை மிக்க அவிவேகிகளாகிய பிராமணர்கள் குறை கூறுவார்களென்னுங் கருத்தானும், சுவாமிகள் தெருக்களி லோரிடத்திலேனு மெதிர்ப்படாமையானும் பல ஆண்டுகளிலுந் தரிசநங் கிடையாமற் போயிற்று. பின்னோர் ஆண்டு இரதோற்சவத்திற்காக முன் போலவே எதீஸ்வரர்களெல்லாம் வந்து எக்ஞேசுவரன் கோவிலில் சேர்ந்து சாஸ்திர விசாரஞ் செய்து கொண்டிருக்கும்போது தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் கமலாலயக் கீழ்கரைப் படித்துறையில் வந்து சயனித்திருப்பதைக் கண்டு அநேக ஜநங்கள் கூடித் தரிசநஞ் செய்துகொண்டு கூட்டமாயிருப்பதை கமலாலயம் மேற்கரை எக்ஞேசுவரன் கோவிலிலிருந்த சிலர் பார்த்து பக்கத்தில் நின்றவர்களைக் கீழ்கரையில் ஜநங்கள் கூடியிருப்பதற்குக் காரணம் என்னென்று வினவ, தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் படித்துறையிற் சயனித்திருக்கிறது; அதுவே காரண மென்று கூற, நெடுநாள் வறியனுய்ப் பொருள் வேண்டுமென்று தவம்புரிந்தவன் புதைய லெதிரே யிருக்கிறதென ஒருவன் சொல்லக்கேட்டு மகிழ்வது போல அங்கிருந்த கிருஷ்ணாநந்தகிரி சுவாமிகள், சங்கர சரஸ்வதி சுவாமிகள், இராமாநந்த சுவாமிகள், ஆகிய பரமாம்ஸ சந்நியாசியர்கள் மூவருங் கேட்டு மகிழ்வுற்று இன்று புண்ணிய திநமாகையால் கமலாலயப் பிரதக்ஷணஞ் செய்யவேண்டுமென்று ஒருவர்க்கொருவர் வார்த்தையாடிக்கொண்டு, வரப் பிரியமுள்ளவர்கள் வரலாம்; மற்றையர்க ளிருக்கலாமென்று கூறிப் பின்னர் வெளிப்பட்டுக் கமலாலயத்தை வலப்பிரதக்ஷணமாகச் செல்லும்போது அங்குள்ள சந்நியாசியர்கள் முதலிய சிஷ்யர்களும், பின்னே சென்றனர். சென்ற அனைவர்களும் கமலாயக் கீழ்க்கரைப் படித்துறையில் வெயிலின் உஷ்ணந் தோன்றாமல் படுத்திருக்கும் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளைப் பார்த்து, கிருஷ்ணாநந்தகிரி முதலிய பரமாம்ஸர்களும் மற்றையர்களும் வெயிலின்றிய விருக்ஷ நிழலிற் சயனித்

திருந்தால் சுகமாயிருக்குமே என ஒவ்வொருவரும் நினைத்தார்கள் நினைக்கவும், சுவாமிகள் புன்னகைகொண்டு "சேதநமாகிய ஆந்மாவுக்கு அசேதநமாகிய விருக்ஷமா சுகத்தைத் தரும்? தருமெனின் கானல் சலமும் உஷ்ண பூமியைக் குளிரச்செய்யும் உண்மை நோக்கமின்மையே பேதப்பிரதீதிக்கு மூலமென" அருளிச்செய்து பின் வளாவிருந்தது. சுவாமிகள் திருவாய்மலர்ந்த வாக்கியங்களைச் செவியேற்ற கிருஷ்ணாநந்த கிரி, சங்கர சரஸ்வதி, இராமாநந்த பாரதி என்னும் பரமாம்ஸர்களும் தங்கள் தங்கள் மநதில் இவ்வாக்கியம் நமக்குச் செய்த உபதேச வாக்கியமென்று சிந்தித்து சற்றைசவர நின்று மநத்தாற் சுவாமிகளுக்குச் செய்யவேண்டிய வழிபாடுகளைச் செய்து பின்னர் கமலாலயத் தென்கரை வழியாக மேல்கரை வந்து சுவாமிகள் சயநித்திருக்கும் திசையை நோக்கி நின்று இங்கிருந்து வெளிப்படையாகவும் நமஸ்காரஞ் செய்யவெண்டுமென்னுங் கருத்தை யுள்ளே பொதிந்துகொண்டு பார்ப்பவர்களுக்கு இவ்விடத்திலிருந்து பார்க்கும்போது தியாகராஜர் கோவிற் றாபி தெரிகின்றமையால் அதனை ஈண்டு நமஸ்கரித்துக் கொள்ளுவது உத்தமத்தினும் உத்தமமாமென்று சொல்லிக் கொண்டு விதியுக்தமாக நமஸ்கரிக்க, மற்றையர்களும் அங்ஙனமே நமஸ்கரித்தார்கள்.

பின்னர் எக்ஞேசுவரர் கோவிலிற் சென்று சிஷ்யர்களைத் தவிர மற்றையர்கள் நீங்கியபோது தங்கள் சிஷ்யர்களைப் பார்த்துக் கிருஷ்ணாநந்தகிரி சுவாமிகள், இன்றைத் திநமே நமக்கு மிகுந்த சுப திநமாகும்; எதனாலெனின், பதினைந்து வருடமாக எனது சித்தத்தி லெழுந்து கொண்டிருந்த சங்கற்பம் இன்று முடிவுற்றது; இஃதன்றி யான் சுவாமிகளைத் தரிசநஞ் செய்யும்போது வெயிலிலிராமல் விருக்ஷ நிழலிலிருந்தால் சுகமாயிருக்குமேயென்று நினைத்தேன்; எனது எண்ணத்தை சுவாமிகளறிந்து, "சேதநமாகிய ஆந்மாவிற்கு அசேதநமாகிய விருக்ஷமா சுகத்தைத் தரும்? தருமெனில் கானற் சலமும் உஷ்ண பூமியைக் குளிரச் செய்யும்" உண்மை நோக்கமின்மையே பேதத் தோற்றத்திற்கு மூலமென எனது சித்தப் பேதபாவனை நீங்கி யுபசாந்தியை யடையும்படி யுபதேச வாக்கியங்களருளியது. அவ்வாக்கியங்கள் சநகாதியர்க்குப் பரசிவம் கல்லாலடியில் தக்ஷிணாமூர்த்தமாக விருந்து அருளிய வாக்கியங்களாகும், என்று மொழியவும், சங்கர சரஸ்வதி, இராமாநந்த பாரதி முதலியவர்களும் மற்றுமுள்ள சாதுக்களும் சுவாமிகள் நினைத்தபடியே யாங்களும் நினைத்தோம்; அப்போது சுவாமிக ளிவ்வாக்கியங்களைக் கூறியது. இவ்வாக்கியங்கள் கல்லாலடியிற் பரசிவம் சநகாதியருக்கு உபதேசித்த வாக்கியங்களானால் இவ் வாக்கியங்களின் பொருளை எங்களுக்கு விரிவாக

எடுத்துரைத்தல் வேண்டுமென யாவரும் பிரார்த்திக்க, சுவாமிகள் கள் கூறிய வாக்கியத்தின் பொருளைக் கிருஷ்ணாநந்தகிரி சுவாமிகள் மூன்று நாள் வரையிலும் உபந்நியாசித்தார்கள். அதைக் கேட்ட சங்கர சரஸ்வதி முதலிய யதீஸ்வரர்களும் மற்றைய சிஷ்ய குழாங் களும் இப்பொருள் சிஞ்ஞாசுக்களுக்கு மிக்க உறுதியைப் பயப் பிக்குமாதலால் நூலாகச் செய்தருள வேண்டுமெனப்பிரார்த்திக்க, கிருஷ்ணாநந்தகிரி சுவாமிகளும் "தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் வாக்கிய சிந்தந"மெனப் பெயரிட்டு வடமொழியில் நூலாகச் செய்யப்பட் டிருக்கின்றது.

பின்னொரு நாள் திருவாரூர் கொத்தத்தெரு வேளாளர் குலத் துதித்த கல்வியறி வடக்கம் குருலிங்க சங்கம பக்தியிற் சிறந்த வராயும், கொட்டகைப் பந்தற் சிங்கார வேலைகளில் வல்லவரா யும், அருணாசல மென்னும் நாமமுடையவராயும், தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளையே சதா தியாநஞ் செய்பவராயும் ஒருவர் இருந்தனர். அவர் ஸ்ரீரங்கம் ஏகாதசி உற்சவத்திற்கு கொட்டகைப் பந்தற் சிங்காரஞ் செய்வதற்கு அழைக்க, அவர் அதற்கு உடன்பட்டு ஸ்ரீரங்கஞ் சென்று கொட்டகைச் சிங்கார வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். ஒருநாள் கொட்டகையில் வர்ண ரேக்கு முத லியவைகளை ஒட்டி அலங்காரஞ் செய்துகொண் டிருக்கும்போது சாரத்தினின்றுந் தான் தவறிக் கீழே விழும்போது தக்ஷிணாமூர்த் திக்கு அபயம் என்றார்.

அப்போது கமலாலய மேல் கரையில் சயனித்துக் கொண் டிருந்த தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் தனது வலக்கையை உயரத் தூக்கி தக்ஷிணாமூர்த்தியை நம்பினால் தக்ஷிணாமூர்த்தி என் செய் வானென்று கூறி ஓர் பதார்த்தத்தைத் தாங்கி மிருதுவாகக் கீழே வைப்பதுபோலத் தூக்கிய கரத்தைக் கீழே வைக்கவும், சுவாமி கள் வெயிலிற் படுத்திருப்பதைக் கண்டு குடைகளைக்கொண்டு நிழல் செய்துகொண்டிருந்த அனைவரும் எவ்விடத்திலோ உந்நத மான ஸ்தாநத்திலிருந்து தவறிக் கீழே விழுந்த ஓர் பக்தனைச் சுவாமிகளிங்கிருந்தபடியே திருக்கரத்தா லேந்திக் கீழே வைத்த தாகத் தோற்றுகிறது. அப் பக்தனை நாம் தரிசிக்கக் கிடைக்குமோ வென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர். அப்போது ஸ்ரீரங்கத்தில் ஓர் பனைப்பிரமாண உயரமுள்ள கொட்டகைப் பந்தலிலிருந்து விழுந்தவர்க்கு ஓர்வித வுபாதியுமின்றி யாரோ ஒரு வர் தாங்கிப் பூமியில் வைத்ததாகத் தோன்றிற்று. அப்போதே யான் இனி தக்ஷிணாமூர்த்திக்கு வேலைக்காரனே யன்றி மற்றைய ரெவர்க்கும் வேலைக்காரனன் றெனச் சொல்லிக்கொண் டெழுந்து அவ்விடம் விட்டுப் புரப்பட்டு மூன்றுநா ளிவ்விடம் வந்து தக்ஷி

ணாமூர்த்தி சுவாமிகள் பாதத்தில் நமஸ்கரித்தெழுந்து சிரமேற்
குவித்த கையினராய் நின்று திருவரங்கத்துக் கொட்டகையி
லிருந்து விழுந்த வென்னை இங்கிருந்தே இரக்ஷித்த கருணாநிதி
யாகிய உமது பெருமையை என்னென்று புகல்வேன்!! என்னை
யனே! அருட்பெருங்கடலே! குணப்பெருங் குன்றே! மதிப்பறு
நிதியமே! மாசிலாமணியே என்று பலவாறு துதிக்கவும் சுவாமி
கள் பக்கத்தினின்ற வன்பர்கள் மூன்று திநத்துக்கு முன் கமலா
லயக்கரையில் சயநித்திருந்த சுவாமிகள் தக்ஷிணாமூர்த்தியை நம்பி
னால் தக்ஷிணாமூர்த்தி என்செய்வா னென வசநித்துக்கொண்டு
ஓர் கையை உயரத் தூக்கி ஏந்திய பாவனையாக விரித்துக் கீழே
யிறக்கிவைத்தது இந்த அன்பரைத்தானென, தக்ஷிணாமூர்த்தி
சுவாமிகளின் சருவக் ஞத்வத்தையும், பெருங் கருணையையும்,
தபோசித்தியையும், வியந்து கொண்டாடியதோடு சுவாமிகள்
கிருபைக்குப் பாத்திரராகிய அருணாசலம் பிள்ளையையும் வியந்த
னர். அன்றுமுதல் அருணாசலம் பிள்ளை குடும்பப்பற்றினை
யொழித்து துறவாச்சிரமியாய் உடற்குயிர்போலும், ஊசி நூற்
போலும் கட்கிமைபோலும் சுவாமிகள் திருவடியை நீங்காமற்
றிருத்தொண்டு செய்துகொண்டிருந்தனர். இத்தகைய திருத்
தொண்டின் விசேடத்தாலும், சுவாமிகள் வீட்சண்யத்தானும்
சில நாட் சென்றபின் சொரூபாநுபூதி யுற்று சுட்டிறந்து நின்று
திகம்பரராயினார்.

பின்னர் எனங்குடி புத்தகரமென்னும் ஓர் சிற்றூரில்
வேளான் செட்டிமரபிற் றோன்றிய சுவாமிநாத செட்டியாரென்பவ
ரொருவ ரிருந்தனர். அவர் கல்வி அறிவு அடக்க வொழுக்கங்
களிலும் குருலிங்க சங்கம பக்தியிலும் சிறந்தவர்; பெரியோர்
மாட்டு வேதாந்த சாத்திர பாடங் கேட்டல், சிந்தித்தல், தெளி
தல், நிட்டை கூடலாதிகளுடையராய் இல்லறநெறிவழா தொழிகி
வருங் காலத்து அவர்க்குப் புத்திரியாகவுதித்த விசாலாக்ஷி யென்
னும் புதல்விக்கு பருவகாலம் வருவதற்கு முன்னமே தேக முழு
தினும் மேகரோகம் பரவி கரும்பாறைபோற் றடித்து சுய வடி
வத்தை மறைத்தது மன்றி மிக்க திநவையு முண்டாக்கியது. அத்
தினவுக்கு ஆற்றாதவளாய் தன் கைகளாற் சொறிதலினாலும், செங்
கன் முதலியவற்றாற் றேய்த்தலினாலும், மரமுதலியவைகளில்
பசுக்களைப்போல் உராஞ்சுதலினாலும், மெய் முழுதும் இரத்த
மயமாகி யூன் வடிதலும், ஈக்கள் மொய்த்தலுந், துர்க்கந்தம் வீசு
தலுமா யிருப்பதைத் தந்தையாகிய சுவாமிநாத செட்டியார்
பார்த்துச் சகியாதவராய் பல வைத்தியர்களைக் கொண்டு பல
மருந்துகளைக் கொடுப்பித்தும், நோய் நீங்காம லிருப்பதைக்
கண்டு மிக்க வியாகூல சித்தரா யிருந்தனர். அக்காலத்தில் மார்க்

கத்தில் செல்லும் ஓர் பெரியவரைக் கண்டு தொழுது மனைக் கழைத்
துப் பல முகமன்கூறிச் சுவாமின்! என் புத்திரியாகிய இப் பெண்
ணுக்கு நேர்ந்துள்ள விந் நோய் நீங்குதற்குரிய ஔடத மிருந்தாற்
கொடுத்தருள வேண்டுமெனக் கூறினார். அச்சொற்கேட்ட துறவர்,
இந் நோய் மிக்க பாப பலத்தாற் றோன்றியதாகலின் மருந்தா
னீங்குவதன்று. ஆதலா லிப்பாவ நீங்கி, நோயு நீங்குதற்கு
வேறோர் மார்க்கமுளது: அதாவது ஓர் தினத்தில் இலட்சந்
துறவினர்க் கந்ந மளிக்க வேண்டு மென்றனர். அதைக்கேட்ட
செட்டியார் யான் அவ்வளவு செய்யுந் தகுதியுடையே னல்லவே
என்செய்வே னென்றனர். அதற் கப் பெரியோர் யானோ ருபா
யஞ் சொல்வேன்; அங்ஙனஞ் செய்தியேல் அநேக இலட்சந் துற
வர்க்கு அந்நமிட்டவனாவா யென்றனர். அவ் வுபாயத்தைக் கூறி
யருள வேண்டுமென்று பணிந்து கேட்க, இங்ஙனங் கேட்ட செட்
டியாருக்குப் பெரியவர் திருமூல நாயனார் திருவாய் மலர்ந்தருளிய
திருமந்திரத்தை மேற்கோளாக்கிச் சொல்லுவாராயினார்.

மேற்படி திருமந்திரச் செய்யுள் மாகேசுவர பூஜையில்

1 தண்டறு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமு முண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்
றெண்டிசை நந்தி யெடுத்துரைத் தானே.

10 வித்தகராகிய வேடத்த ருண்டவூ
ணத்த னயன்மா லருந்திய வண்ணமாஞ்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தி யாமென நம்மூலம் மொழிந்ததே.

எனக் கூறியிருத்தலால் பிரஹ்மஞ்ஞானியாகிய ஒருவருக்கு நீ
அந்நமளிப்பாயாயின் மூன்றுலகத்தார்க்கும் முத்தேவர்க்கும்
அந்ந மளித்தவனாவா யென்றனர். அதைக்கேட்ட செட்டியார்
அத்தகைய பிரஹ்மஞ் ஞானியானவ ரெங்கிருக்கின்றனர்? அவர்
பெயர் யாதெனக் கேட்டனர். அதற்கப் பெரியாராகிய துறவர்
ஞானியைக் காண்பது மிக்க வருமையாயினும் இவ் வுலகஞ்செய் புண்
ணியப் பேற்றால் செல்வத் திருவாரூரில்ஓடம் போக்கியாற்றி நருகில்
பிரஹ்மஞ்ஞானியும் நடேசப்பிரான் இட்டருளிய தக்ஷிணாமூர்த்தி
யென்னுந் திருநாமமு முடைய திகம்பரராகிய பெரியாரொருவ
ருளர். அவருக்குப் பிக்ஷை செய்வித்து அப் பரிகலச்சேடத்தை
மனையாட்கும் மகட்கும் கொடுத்து நீயுமருந்துவா யென்று
ரைத்தனர். அப்போது செட்டியார் அங்ஙனமே முன்வருங் குரு
வாரத்தன்று சென்று செய்கின்றேன்; தாங்களும் அடியேனுக்குத்
துணையாக வரல்வேண்டும்; இப்போது என் மனையிற்றானே சுவாமி

கள் பிக்ஷை செய்துகொள்ள வேண்டு மென்றனர். அதற்குப் பெரியார் செட்டியாரைப் பார்த்து, நமது மனையில் ஓரடிய வருக் கந்த மளித்தால் அவ்வொருவருக்கிட்ட புண்ணிய மாத்திரம் நமக்குண்டாம். உண்டவர்க்குப் பசி நீங்குவதன்றி வேறு பய னில்லை. பிரஹமஞ் ஞானியாகிய ஒருவர்க்குப் பிக்ஷை செய்வித்து அப் பிரசாதத்தோடு ஓர் துறவிக்கு அந்ந மளித்தால் கோடி துற வினர்க்கு அந்ந மளித்த பயனுண்டாம். உண்டவர்கட்குப் பசி நோய் நீங்குதலோடு பிறவி நோய் நீங்கிவிடும். ஆதலால் தக்ஷிணா மூர்த்தி சுவாமிகளுக்கு உன்றற் பாகஞ்செய்து நிவேதநஞ் செய் வித்த அன்னமாதிய பிரசாதங்களோடு நமக்கும் பிக்ஷை செய் விப்பாயானல் அது அநேக துறவினர்க்கு உண வருத் திய பயன் உனக்குத் தருவதுமன்றி உண்ட எனக்குப் பசி நோயோடு அதற்குக் காரணமாகிய ஜநந நோயையும் நிவிர்த் திக்கு மாதலால் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் சந்நிதாநத்தில் வந்து பிரசாத பிக்ஷையை எடுத்துக்கொள்கிறே னென்று சொல்லி எழுந்து போய்விட்டனர். அன்று முதல் சுவாமிநாத செட்டியார் அவர் மனைவி புத்திரியாகிய மூவரும் ஓர் கால் போஜநஞ் செய் பவர்களாய் விரத சீலராயிருந்து குருவாரத்தில் அபிடேகத் திற்கும், மகேசுவர பூசைக்கும், வேண்டிய சாமக்கிரியைகளை வண்டியி லேற்றிக்கொண்டு திருவாரூருக்கு வந்து ஸ்நாந சந்தி களை முடித்துக் கொண்டு மடத்துக்குச் சென்று அங்குள்ள பாக சீலர்களைக் கொண்டு பாகஞ்செய்யச் சொல்லிவிட்டு அவர்கள் மூவரும் பழவர்க்க மாதிகளைக் கொண்டு வந்து சுவாமிகட்கு முன் வைத்துப் பலதரம் வலம் வந்து நமஸ்கரித் தெழுந்தபோது சுவாமி கள் உபசாந்தமாய்ச் சுட்டிறந்து சித்திர தீபம்போ லசைவற விருந்தது. அப்போது சுவாமிநாத செட்டியார் சுவாமிகளிருக்கும் நிலைநோக்கி அன்புமிக்கூர ஆநந்த சித்தராய்த் தன் புத்திரியை சுவாமிகள் சந்நிதியில் நிற்கச் செய்து தான் அஞ்சலியஸ்தராய் நின்று தன் கண்களில் ஆநந்த பாஷ்பம் இடைவிடாது சொரியச் சுவாமிகளைக் குறித்து ஒரு பதிகம் பாடினர்; அது வருமாறு :—

ஸ்ரீமத் அகண்ட பரிபூர்ணத்விதீய சச்சிதாநந்த
சுத்த சைதந்யசிவ தக்ஷிணாமூர்த்தி குருவே நம:

வாயினல் வாழ்த்திநெஞ்சால் வஸ்துநிர்த்தேசஞ்செய்து
காயத்தால் வணக்கஞ்செய்யுங் கருத்துடை யன்பர் முன்பாய்
நாயினுங் கடையனுகி நானிருப்பதுநன் ருமோ
தாயினுங் கருணைபூத்த சச்சிதாநந்த வாழ்வே. (1)

மகம்பல புரிந்தும்முன்னூன் மறைபல வுணர்ந்தும் ஞானச்
சுகந்தனை யடையாரென்றே சொல்லினர் முன்னோ ரெல்லா
மகந்தையை யொழிக்கும்நின்ன ருளதே வேண்டுமூர்நீர்ச்
சகமெலா நிறைந்துநின்ற சச்சிதாநந்த வாழ்வே. (2)

இச்சையைப் பேராநந்தத் திடத்திலும் வெகுளிதன்னை
யெச்சமி லஞ்ஞானத்தி னிடத்திலுஞ் செலுத்தினல்லால்
பொய்ச்சழக் கறுக்குமுண்மைப் போதம்வந் துதயமாமோ
தற்சிவ ரூபமான சச்சிதாநந்த வாழ்வே. (3)

அகமெனும் விருத்தியான்மெய் யறிவெனும் விருத்தியாலுஞ்
சகமெனும் விருத்தியென்றன் சங்கற்ப மென்பதாலுந்
தகர்ந்திடு மலதுமற்றோர் சாதநந் தன்னால்நீங்கத்
தகுமதோ வுரைத்தல்வேண்டுஞ் சச்சிதாந்த வாழ்வே. (4)

கனவிடைச் சூழ்ந்தவெந்தீ கண்விழித் தளவினீங்கிப்,
பினையுறு ததின்முத்தாபப் பெருந்தழ லருளாற்றன்னைக்,
கனபரி புரணாநந்தக் கண்ணதாக் கண்டாலன்றித்,
தனைவிட வற்றோசொல்வாய்ச் சச்சிதாநந்த வாழ்வே. (5)

நாடகச் சாலைநாப்பண் ணாட்டிய கம்பம்போலக்,
கூடகத் திருக்குந்தம்மைக் குறித்துமெய்ஞ் ஞாநாநந்த,
வீடகத் திருக்கவல்லார் விரைநற வுமிழுங்கஞ்சத்
தாடலை யணிவன்கொல்லோ சச்சிதாநந்த வாழ்வே. (6)

புனல்கன லுறுமண்மாரி பொழியினும் புயல்கள்கூடித்,
தனதியல் வழுவா விண்போற் சத்துவரசோதமத்தி,
னினமுறு தொழில்களாற்ற னியல்வழு வாதிருக்குந்,
தனிநிலை நிற்பதென்றோ சச்சிதாநந்த வாழ்வே. (7)

இமைப்பினும் விருப்பினுங்கூ ரிருளையோர் படித்தாய்க்காணு,
நிமைக்கருங் கண்போற்றன்னை நினைப்பினு மறப்பினுந்தான்,
சமத்துவ மாகக்காணுந் தத்துவ ஞாநந்தன்னைச்,
சமைப்பதிங் கெனக்கெக்காலஞ் சச்சிதாநந்த வாழ்வே. (8)

முற்பத விசாரந்தன்னான் மூவிதவுடல்வே றாக்கித்,
தற்பத விசாரந்தன்னாற் சகலமு மித்தையாகிக்,
கற்பனை யனைத்துமந்தக் கடைப்பத விசாரந்தன்னாற்,
றற்பர மாக்கலென்றோ சச்சிதாநந்த வாழ்வே. (9)

மமரொழித் தருளுநிற்கே மாறியான் செய்வதென்னே,
கமலநற் சரணமென்றன் கருத்திடை யிருத்தலன்றித்,
தமரொடுந் திருவாரூரில் றக்ஷிணா மூர்த்தியென்னுஞ்,
சமரச குருவாய்வந்த சச்சிதாநந்த வாழ்வே. (10)

இங்ஙனம் பதிகம் பாடவும் சுவாமிகள் செட்டியாரைக் கடைக்கண்ணால் வீட்சிக்க, அவர் விருத்தியில் ஒன்றேயுளதெனும் பிரக்ஞையு நழுவி பொருளெப்படியோ அப்படியிரா நின்ற சுவாநுபூதி நிலைமை விளங்கப்பெற்றுச் சற்றுப்போது அந்நிலையில் அசைவற நின்று பின் வெளிவந்து சுவாமிகள் வீட்சண்ணியத்தால் அதீத நிலைமையு மநுபவிக்கப் பெற்றேனென பலவாறு தோத்திரஞ் செய்தனர். அப்போது பக்கலில் நின்ற சிலர் செட்டியார் பாடிய பதிகத்தில் தன் புத்திரிக்குள்ள உபாதிகள் நீங்க வேண்டுமென ஓர் பாசுரத்திலேனுங் கேட்டிலர். ஆதலின் புத்திரி யிடத்துப் பாசமும் காருண்ணியமு மில்லாதவர் சுவாமிகள் மாட்டே யன்புடையரென்று வசநித்துக் கொண்டார்கள். அவ்வசநத்தை கேள்வியுற்ற செட்டியார் பின்னும் பல தரம் வலம்வந்து நமஸ்கரித்தெழுந்து சிரமேற்குவித்த கையராய்ச் சந்நிதியில் நின்று தன் புத்திரிக்குற்ற மேகநோய் நீங்கும்படி கிருபை செய்யவேண்டுமென்று பல பாடல்கள் பாடித் துதித்தனர். அப்போது சுவாமிகள் அவா குழந்தையைப் பார்த்து "என்னடி வேண்டு மென்னடி-வேண்டு" மெனப் பலதரந் திருவாய் மலர்ந்து அப் பெண்பேரில் பலதரம் வாயூறலைக் காறி யுமிழ்ந்தது. உமிழுந்தோறும் விசாலாட்சி யென்னும் அப் பெண்ணானவள் விவேக முடையவளாகி "உன்னடி வேண்டும்,! உன்னடி வேண்டு" மெனச் சொல்லிக் கொண்டு, சுவாமிகள் திருவா யமுதத்தைக் கையிலேந்தி யமிர்தமாக உட்கொண்டும், சரீராதியந்தமுங் களபக் குழம்பாக மிக விருப்பத்துடன் பூசியுங் கொண்டனள். அப்போது சுவாமிகள் அடிவேண்டில் நோய் பொடியா யுதிரும் என்றருளியது. அப் பெண்ணுக்குச் சுவாமிகள் வாயமுதம் பட்டமாத்திரத்தானே விவேக முண்டாகியதுமன்றி முன் மெய்யிலுள்ள தினவுமுற்று நீங்கிற்று. அத்தருணத்திற் குருநாதன் பக்கத்தே நின்ற திருப்பணிச் சுவாமிகளுக்கு முன் அபிடேகச் சாமன்களை எடுத்து வைத்து சுவாமிகளுக்கு அபிடேகஞ் செய்ய வேண்டுமென வேண்டிக் கொண்டார்கள். அதற் குடன்பட்ட அன்னார் விதியுக்தமாக சுவாமிகளுக்கு அபிடேகஞ்செய்து விபூதிக் காப் பணிந்து புட்பாதிகளையும் அலங்கரித்து செட்டியாரை நோக்கி, உன் புதல்வியை சந்நிதியிலுள்ள மகாபாப நிவாரண தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்வித்து உலர்ந்த வஸ்திரந் தரிக்கச் செய்து

விபூதியணிந்து சுவாமிகட்கு நைவேதநத்துக்குரிய அமுது முத
லிய கறி பதார்த்தங்களைக் கொண்டுவந்து படைக்கச் செய்வா
யாக வென்றனர். அதைக் கேட்ட செட்டியார் தமது புதல்வியைக்
கொண்டு அவ்வாறே செய்வித்தனர். உடனே திருப்பணிச் சுவாமி
கள் தூபதீபங்காட்டி நிவேதநஞ் செய்து, பின்னர் சோடசோப
சாரம் விதிமுறை வழாது செய்து முடித்துச் சந்நிதியில் இருந்த
விபூதியை யெடுத்து தான் றரித்துக்கொண்டு தரிசநத்துக்கு வந்த
அன்பர்களுக்குங் கொடுத்துப் பின்னர் செட்டியார், மனைவி,
மகள் மூவரும் ஏனையடியவர்களுஞ் சூழ்ந்து நிற்கச் சுவாமிகட்கு
அமுது செய்வித்து எஞ்சிய அமுதை தரிசனத்துக்கு வந்திருந்த
துறவர்களாகிய அடியவர்கட்கும் அமுது முதலியதுஞ் செய்வித்
துப், பின்னர் செட்டியார், மனைவி, மகளாகிய மூவரும் சுவாமி
கள் பரிகலச்சேடத்தை சிரத்தையோடும் உடற்பிணி பிறவிப்
பிணிகட்கு மருந்தாக உட்கொண்டனர். அதன் பின்னர் சுவாமி
கள் சந்நிதாநத்தில் வந்து மனைவியையும் மகளையும் இருபாலும்
நின்று விசிறி வீசும்படி செய்து தான் சிரமேற் கூப்பிய கையின
ராய் சந்நிதியினின்று கண்கள் நீர் சோரத் தோத்திரஞ் செய்தனர்;
பின்னர் சூரியாஸ்தமந சமயத்தில் மகா பாபநாச தீர்த்தத்தில்
சந்தி முடித்துக்கொண்டு சுவாமிகளைப் பலதரம் வந்து நமஸ்
கரித்துச் சிரத்தையோடு பால் பழம் முதலியவைகளைத் திருப்
பணிச் சுவாமிகளால் நிவேதிக்கச் செய்து குருநாதன் உண்ட
சேடத்தைத் தாங்கள் முன்போலவே யுட்கொண்டு சுவாமிகள்
திருவடிக்கு நேராகத் தங்கள் சிரங்களை வைத்துக்கொண்டு துயில்
கொண்டார்கள். மறுநாட் காலையி லெழுந்தபோது விசாலாட்சியி
னுருவத்தை மறைத்திருந்த கரும்பாறை போன்ற மேகப்பற்றுக்
கள் முழுமையும் பொடியா யுதிர்ந்து பூமியிலும் வஸ்திரத்திலும்
நிரம்பிக் கிடந்தது. விசாலாட்சியின் சரீரம் நோய் பிடித்தற்கு
முன்னிருந்த தேக காந்தியை விடத் தேசசா யிருந்ததை மாதா
பிதாக்கள் கண்டு ஆச்சரியமும், ஆநந்தமு முற்றனர்.
விசாலாட்சிக்கும் வேண்டில்அடி நோய் பொடியாயுதிரும் என்ற
சுவாமிகளின் வாக்கியப்படியே யுதிர்ந்து விட்டது. இனி பவ
நோயும் முற்றும் உதிர்ந்து விடுமென நினைந்து ஆச்சரியமும்,
ஆநந்தமும் உற்றனள். பின் மூவரும் பாப நிவாரண தீர்த்தத்தில்
மூழ்கி விபூதியாதிகள் தரித்துக்கொண்டு சுவாமிகளை நமஸ்

கரித்துத் தொண்டு புரிபவர்களாய்ச் சின்னாளிருந்து பின் விடை பெற்றுக்கொண்டு தம் மூருக்குச் சென்றார்கள்.

இங்ஙனம் உள்ளன்போடு பிரார்த்திக்கும் பக்தர்களுக்கு அவரவர்கள் வேண்டு கோளுக்கிணைய உரோக நிவாரணம், புத்திர சந்தானம், திரவிய சம்பத்து, ஞான சம்பத்துக்களையும் உதிப்பித்தலாகிய வற்புதங்கடோன்ற நடை சமாதியினராகவும், பிரஹ்ம வித்துவரியராகவும் விடயச்சுட்டிறந்த சீவன் முத்தர்களாகவும் சிலகால மிருந்தது. பின்னரோர் நாள் மகா மண்டபத்தி லிடப்பட்டிருந்த ஆதநத்தில் வடமுகமா யிருந்து "முடிந்தது முடிந்தது முற்றிலு முடிந்த" தென வசனித்துக்கொண்டு நிட்டை கூடியது. சுவாமிகள் முடிந்ததென முடிவுரை கூறி நிட்டை கூடியதை யடித்தொண்டுசெய்துகொண்டுவரும் திகம்பராகிய பழநியப்ப சுவாமிகள், சுவாமிகள் விதேகமுத்தியை யடையுங்காலமிந்தக் காலமாக இருக்குமெனக் குறிப்பினாலறிந்து பலர்க்கும் தெரிவித்ததினாலும், பக்தர்களிற் சிலர்க்குத் தங்கள் தங்கள் சரீரத்திற் காணப்படும் குறிகளினாலும் சிலர்க்குச் சொற்பனங்களினாலும் சுவாமிகளைத் தரிசிக்க வேண்டுமென மநத்திற்றோன்றி ஆங்காங்கிருந்து சில பெரியார்கள் முதலிய பல பக்தர்களுமாக வந்து சுவாமிகள் நிட்டை கூடியிருப்பதைத் தரிசநஞ் செய்துகொண் டிருக்கும்போது நிட்டை கூடிய எட்டாநாளாகிய (கலி 4937) மன்மத-௵ ஆவணி௴ உத்திர நக்ஷத்திரமாகிய சுப தினத்தில் சச்சிதாநந்த பரிபூரண வியோமாதீதப் பிரஹ்மமாத்திரமாகிய விதேக கைவல்யத்தை யடைந்தது.

அப்போது சுற்றிலுமிருந்த பரிபக்குவர்களாகிய பெரியார்கள் மனமானவை சற்றுப்போது ஆத்மாவி லசைவற்று நின்றன; சுகந்த பரிமளமாகிய காற்றுகள் வீசின; சந்தந மழைத்துளிகள் சுற்றிலும் நின்றவர்கள் சரீரங்களிற் றோன்றும்படி பெய்தன; பெரியார்கள் தங்கள்மநம் அசைவற நின்றது முதலிய சில வேதுக்களால் சுவாமிகள் விதேக கைவல்யத்தை யடைந்ததென வறிந்து பலர்க்குந் தெரிவித்துச் சுவாமிகளுக்கு அபிடேக வலங்கார நிவேதநமாகிய பூசைகள் செய்வித்துத் தரிசித்து விபூதிப் பிரசாதம் பெற்றுக் கொண்டு முன் சுவாமிகளுக்காக கட்டப்பட்டிருந்த சமாதிக் கோவிலில் எழுந்தருளப்பண்ணி பேராநந்தமுற்று மந தாற்றியாணித்து வாக்கால் வாழ்த்தினர்கள்.

முற்றும்.

S. B. Press, Choolai, Madras. 13-8-46. Copies 1500. Party Paper Supply.

## ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்ட கலியினு லாயிரத் தக்கொளா யிரமுமுப்பத் தாறுமாய்ச், செல்லுமன் மதவருட மாதமா வணிதனிற் றேதி பனிரண்டாவதில், திகழ்ந்தி வாரமே பூர்வபட் சந்திரிதி யைத்தி திபி லுத்திரத்திற, சேர்பகற் பதினைந்து நாழிகைவி ருச்சிகத் திவ்வியலி ராசிவேளை, ஏர்கொண்ட வன்பர்கின் றேத்துந்தி யாகேச விறைவர்வா ழாரூரினில், இந்நாடு நன்னாடு பன்னாடு மெந் நாடெனச்சரிதை யிற்சிறந்தே, எந்தையுரு கிற்கிரியை யுற்றுநற் சாதனமி சைந்துயோ கத்தினெறியே, யேகியட் டாங்கமுடனேந் தவத் தையுமதனி லேஞான பூமியும்போய், பேர்கொண்ட மாயை தனி லீசனும் வித்தையிற் பிரதிபிம் பிக்குமுயிரும், பெற்றவிட் சேபமதில் வருபூத வுலகமும் பிரகிருதி கற்பனையெனப், பேரருட் பூரணப் பொருளென்ப தேகமே பேசினது நாமாகுநம், பிரிவற்ற பதமெனச் சச்சிதா னந்தமாய்ப் பிரதிபலித்திடு சொரூபமாய், வார் கொண்ட வேதாந்த சித்தாந்த சமரசம் வளர்மகிமை யோதவசமோ, மாட்சியுறு நீட்சிபுரி காட்சியினு பேட்சித்து மாண வர்க்கருள் புரிந்தும், மன்னுஞா னனந்த வாசாமகோசரம் வாய்ந்த வசிபதமேவிய, மாசிலாத் தெக்ஷிணாமூர்த்திகுரு சாமிபொன் மல ரடிகள் போற்றி போற்றி.

முத்துக்கக் கடல்கடத்தும் புணைய தாகி மோன மெலாங் கடந்தபர மோனமாகி, எத்திக்கும் நிறைந்தபரிபூர்ணமாகி யிகபர மா முலகனைத்து மெழுதற்கான, வித்துக்குள் வித்தாகிப் பரமாய்ச் சுத்த வெளியாகி வன்மீக புரத்தின் மேவிச், சத்துச்சித் தானந்த மயமாய் நிற்குந் தக்ஷிணாமூர்த்திபதந் தலைமேற் கொள்வாம்.

-630 307
1105
21:3320

| எண் | நூல் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 10 | குட்டிக் கண்டனம் என்னும் வேதாந்த சித்தாந்த முக்தாவலி, .... | 0 | 8 | 0 |
| 11. | நியாய சித்தாந்த முக்தாவலி நியாய காரிகாவலி சுலோகத்திற்கு தமிழ்ச் செய்யுளும் அதன் விசேஷ உரையும். .... | 0 | 10 | 0 |
| 12. | சித்தாந்தலேச சங்கிரகம் வசனம் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய நூலின் மொழிப்பெயர்ப்பு. .... | 1 | 0 | 0 |
| 13. | ஸ்ரீகங்காலகரி ஸ்ரீஜகந்நாத் பண்டிதராஜ ரருளிய சுலோகத்திற்கு செய்யுளும் உரையும். .... | 0 | 3 | 0 |
| 14. | சக்தி சரிதாம்ருதமென்னும் ஸ்ரீசௌந்தரியநாயகி பிள்ளைத்தமிழ். .... | 0 | 10 | 0 |
| 15. | சித்தாந்த பிந்து (வசனம்). ஸ்ரீ மதுசூதன சரஸ்வதி சுவாமிகள் அருளிச் செய்த நூலின் மொழிப் பெயர்ப்பு. .... | 0 | 10 | 0 |
| | ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் .... | 0 | 10 | 0 |
| 16. | ஸ்ரீ பர்த்ருஹரி வைராக்ய சதகம் மூல சுலோகத்திற்கு செய்யுளும் உரையும். .... | 0 | 3 | 0 |
| | சிவமஹிம்நஸ்தோத்திரம் — தேவநாகராக்ஷரத்தில் ஸ்ரீ புஷ்பதந்தமுனிவர் அருளிச்செய்த சுலோகமும், ஸ்ரீமத் வல்லநாடு சிவராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்த பதவுரையும், விசேஷ உரையும் .... | 0 | 4 | 0 |
| | திருவண்ணாமலை ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர் சரித்திரமும், அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீ அண்ணாமலையார் தோத்திரப் பாமாலையும். .... | 0 | 4 | 0 |
| | சீடாசாரம் — சோவிலூர் ஸ்ரீ அருணாசல ஞானதேசிக சுவாமிகள் திரட்டியருளிய மூலமும், திருப்புவனம் ஸ்ரீ காசிகாநந்த ஞானாசார்ய சுவாமிகள் இயற்றிய பாலபோதினி என்னும் உரையும். .... | 0 | 4 | 0 |
| | ஈசாவாஸ்யோபநிஷத்தும், சங்கர பாஷ்யமும். — திருப்பூவனம் ஸ்ரீலஸ்ரீ காசிகாநந்த ஞானாசார்ய சுவாமிகள் மொழி பெயர்த்தது. .... | 0 | 4 | 0 |

---

கிடைக்குமிடங்கள்.

**வீர சுப்பைய சுவாமிகள் மடாலயம்,**

நெ. 9. பெரம்பூர் பாரக்ஸ் ரோட், சூளை, வேப்பேரி, சென்னை.

**ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடாலயம்,**

மடப்புரம், திருவாரூர்.

ஸ்ரீ சரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள், மடம், வியாசர்பாடி,
பெரம்பூர், பாரக்ஸ் போஸ்டு, சென்னை.